DEUS MEUS ET OMNIA
CMSF

# பாதை

FRANCISCAN MISSIONARY BROTHERS

ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்
- (மத் 3:3)

பாதை 3 | ஆனி - ஆடி - 2006 | பயணம் 14

# அமைதிக்கான முயற்சியில் ஆன்மீகத் தலைவர்கள்



மனிதம் காக்கும் புனிதப் பணிகளில் ஆன்மீக தலைவர்கள் ஒன்றிணைந்து உண்மைச் சமாதானம் மலர குரல் கொடுக்கும் அரிய பணியில் ம[illegible]ரர், மட்டு நகர், யாழ் ஆயர்கள், ஆயர் மன்ற உறுப்பினர்கள் முன்ந[illegible]று உழைப்பது துன்புறும் மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுக்கிறது.

இவை ஒரு மதத்துக்கோ, ஒரு இனத்துக்கோ ஏற்பட்ட துயரச் சம்பவமாகக் கருதாது சகல இன, மத, பிரதேசம் கடந்து உண்மைச் சமாதானத்தை மக்கள் அனுபவிக்க உழைக்க வேண்டியது பொறுப்புள்ளவர்களின் முக்கிய பங்காகும்.

உயிர்கொலைகள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளே. இறப்பவரை இனம், மதம் பார்த்து அனுதாபப்படாது முதலில் இறைவனின் சாயலில் உள்ள மனித உயிர் என்பதனை ஒவ்வொரு நல் இதயம் கொண்டவர்களும் ஏற்றுக்கொள்வதே எந்த மதத் தினரதும் ஆன்மீக வெளிப்பாடாக வேண்டும்.

உயிர்க்கொலைகள் கண்டிக்கப்படுவது டன் இவற்றிலும் மேலாக வழிபாட்டுத் தலங்களில் தஞ்சம் கோரும் மக்களை இம்சைப்படுத்தி ஆயுத அட்டூழியம் செய்வதை எந்த வயைிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை ஞாயப்படுத்தல் அனாகரிக மற்ற அரக்கத்தனமாகக் கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்.

மனிதர்களிடம் பெறமுடியாத உண்மை அமைதியை, நம்பிக்கையை ஆண்டவன் சன்னிதியை நாடி ஓடி தஞ்சம் கோரும் மக்களின் ஆன்மீக வாஞ்சையில் இறைவனிடம் சரண்புகும் மக்களின் விசுவாச தேடல் இன்றும் பல்வேறும் சமய சன்னிதியிலும் காணமுடிகிறது. அந்த வகையில் அமைதியை தேடி... ஒரு வார கால ஆன்மீக தேடலை மட்டு நகரிலும், உண்ணா நோன்பிருந்து நீதி கேட்டு மன்னார் வெற்றிநாயகி ஆலயத்தில் நடாத்தும் வழிபாடுகளும், சர்வமத ஒன்றுகூடலால் நாட்டின் அமைதிக்கு வழிகாண முனையும் யாழ். மாவட்ட முயற்சிகளும் ஆயர் மன்ற தரிசிப்புக்களும் நாடு எங்கும் துன்புறும் மக்களுக்கு துயர் தீர குரல் கொடுக்கும் மக்கள் சக்தி வெளிப்பாடுகளே. இவை உண்மை சமாதானத்திற்கும், நம்பிக்கையூட்டும் ஆன்மீகத் தேடலுக்கும் அர்த்தமான செயல்களாகும்.

மனிதனிடம் பெறமுடியாது அமைதியை, சாமாதானத்தை மனமுருகி இறைவனிடம் தேடும் சர்வமதங்களும் ஒன்றிணைந்து வழிகாட்ட வேண்டும். அரசியல் சூழ்ச்சியில் மதத் தலைவர்கள் சிக்கி மக்கள் துயரில் குளிர்காய நினைப்பவர்கள் உண்மையான ஆன்மீகவாதிகளாக இருக்க முடியாது.

துயரத்தில் பங்கேற்போரும் அவர்களுக்காகக் குரல் கொடுப்போரும் இறைவனின் சமாதானத்தின் தூதுவர்களே இப்பணியில் ஒவ்வொருவரும் பங்கேற்பாளராக வேணடும்.

சமாதானதின் கருவியாக
இறைவா!
உன் சாந்தியின் கருவியாக என்னை
ஆக்கியருளும்
எங்கும் பகையுள்ளதோ அங்கு
அன்பையும்
எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு
மன்னிப்பையும்
எங்கு ஐயமுள்ளதோ அங்கு
நம்பிக்கையும்
எங்கு இருள் உள்ளதோ அங்கு
ஒளியையும்
எங்கு துன்பமுள்ளதோ அங்கு
இன்பத்தையும்
யான் பரப்பிட அருள் தாரும்.
நான் என் ஆறுதலுக்காக
அலைவதை விட்டு
ஆறுதலை கொடுக்க விழைவேனாக
என்னை மற்றோர் புரிந்துகொள்ள
வேண்டுமென்று
துடிப்பதை விடுத்து, ஏனையோரைப்
புரிந்துகொள்ள யான் விழைவேனாக
என்னை மற்றோர் நேசிக்க வேண்டுமென்று
தவிப்பதை விடுத்து
மற்றவர்களை நேசிக்க முற்படுவேனாக
ஏனெனில்!
கொடுப்பதன் மூலம்தான்
பெற்றுக்கொள்ள முடியும்.
மன்னிப்பதன் மூலம்தான்
மன்னிப்படைய முடியும்.
மடிவதன் மூலம்தான் முடிவில்லாத
வாழ்விற்குள் பிறக்க முடியும்.
ஆமென்.
-புனித பிரான்சிஸ் அசிசியார்

## வெள்ளி விழா வாழ்த்து

யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயம் ஆண்டகை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு வெள்ளி விழாவினை 30 ஜூலை 2006இல் கொண்டாடுகிறார்.

பல சவால்களை எதிர்கொள்ளும் யாழ் மக்களின் ஆன்மீக அரசியல், சமூக பணிகளில் ஆற்றி வரும் அளப்பரிய பணிகளை நல்லாயனாக நின்று வழிகாட்ட, ஆன்மீக உடலுள பலம் பெற்று வாழ, வாழ்த்தி இறை ஆசீர் வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

# புனித அந்தோனியார் வாழ்வு சமாதானத்தின் முன்மாதிரியே

## பாசையூர் திருவிழாவில் அருட்பணி லம்பேட் அடிகள்

இளைஞனாக 35 வயதுவரை வாழ்ந்து சகல இன, மத மக்களின் காவலரான புனித அந்தோனியார் வாழ்வு புனித பிரான்சீஸ்கன் சபையின் அருட்சகோதரராக சிறந்த பிரமா[illegible]கமுள்ளவராக, வாழ்ந்த புனித அந்தோனியார் தனது வாழ்வில் அமைச்சல்,இறைவிசுவாச வாழ்விலும் தன்னை இறை சித்தத்தை ஏற்று வாழ்ந்ததால் அவரது துறவு மூலம் ஆண்டவருடன் நெருங்கிவாழும் பாக்கியம் கிடைத்தது.

அவரது பூட்டப்பட்ட அறையில் செபித்துக்கொண்டிருந்த அந்தோனியார் யாரோடோ பேசுவதுபோல் அறிந்து அவரது சக தோழர் துறப்புத் துவாரத்தால் பார்த்தபோது கரத்தில் நற்செய்தியும், சின்னயேசுவும் இருப்பதைக் கண்டு வியந்தவர் எழுந்து ஏனையவர்களுக்கும் தெரிவிக்க விரைந்து ஓட முற்பட்டார். வாசலில் கேட்ட சத்தத்தால் திகைப்புற்ற அந்தோனியார் கதவைத் திறந்து நண்பர் ஓடுவதைக் கண்டு அழைத்தார். இங்கு நடந்ததை எவருக்கும் கூற வேண்டாம் என இறைஞ்சிக் கேட்டார் இதுவே கண்கண்ட சாட்சியாக இன்று புனித அந்தோனியாரின் விழாக் கொண்டாடும் நாம் காட்சியாகக் காண்கின்றோம்.

புனித பிரான்சிஸ்கன் சபையின் அருட்.சகோதரரான புனித அந்தோனியார் மிக முக்கிய விழாவில் பிரசங்கித்த வராதலால் பங்குத் தந்தையின் வேண்டுதலில் புனித அந்தோனியார் பிரசங்கம் செய்தார். இவரது ஞான அறிவுரைகள் அஞ்ஞானிகளுக்கும், மத பிறள்வில் கலங்கியவர்களுக்கும் மனமாற்றத்தை ஏற்படுத்தியதால் அவரது பணி, பிரசங்கப் பணியானது. இவரது நற்செய்தி பகர்ந்த நாவும் இன்று அழியா வரம்பெற்றிருப்பதை புனிதரின் வரலாறு சான்றாகும்.

இப் புனிதர் சமாதானத்தின் தூதராக இன்றும் மதம், மொழி, நாடு கடந்து சகலரையும் ஒன்றிணைத்து தனது பக்தர்களாக ஒன்றுபடுத்துகிறார். அவரது பக்தர்கள் சமாதானத்தின் தூதர்களாகவும் மாறுதலே இப் புனிதரின் வழி அருள்பெறும், அமைதி கிட்டும் வழியாகும் என அருட்தந்தை லம்பட் அடிகள் பாசையூர் புனித அந்தோனியார் திருவிழாவில் மறையுரையாற்கையில் தெரிவித்தார்.

## சமூகத் தொடர்பு தினம்

உலக சமூக தொடர்புதினம் 40 ஆவது ஆண்டு நிறைவு மே மாதம் 28 ஆம் திகதி உலகில் கொண்டாடப்பட்டது. "ஊடகம் - தொடர்புகளின் வலைப் பின்னல் - ஒன்றிப்பும் ஒத்துழைப்பும்" என்ற தலைப்பில் திருத்தந்தை 16 ஆவது ஆசீர்வாதப்பர் செய்தி வெளியிட்டுள்ளார்.

தொடர்பூடகம் ஆன்மீகத் தளத்தில் மிக காத்திரமான பங்கை வகித்ததால் தான் உலக மக்கள் கிறிஸ்தவத்தின் நற்செய்தியை அறிந்து பகர்ந்து, வளர்ந்து வாழ வழிசமைத்ததை இன்றைய கிறிஸ்தவ உலகு நன்கு அனுபவிக்கிறது.

எமது மண்ணில் ஆன்மீகம் வளர கல்விச் சாலைகளும், அச்சகங்களும், ஆன்மீகப் பாதையில் முக்கிய தளமாய் அமைந்ததை முன்னோர் நன்கு பயன்படுத்தினர். இன்று எமது நாட்டுத் தொடர்பூடகங்கள் மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்திப் பார்ப்பதில் 40 ஆண்டு உலக தொடர்புசாதன வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் அளவு எமது தொடர்பூடகங்கள் வளர்க்கப்படுகிறதா? அன்றி ஒருசிலரது வளர்ச்சியை மட்டும் கருத்தாய்க் கொண்டுள்ளதா? என்பதை அளவிட்டுக் கொண்டு 41 ஆவது ஆண்டில் உருவாக்கி உருவாகும் தொடர்பூடக வழியில் எத்தனை பேரை உருவாக்கலாம் என்ற தூரநோக்குடன் செயற்படுவதில் தொடர்பூடகப் பணிகள் தொடரவேண்டும் என்பதே இன்றைய பாதையின் தேடலாகும்.

# பிரான்சிஸ்கன் சகோதரர்களின் முயற்சியால் குருக்கள் மடத்தில் நிரந்தர வீடுகள் கையளிப்பு

புனித பிரான்சீஸ்கன் சகோதரர் களின் முயற்சியால் மட்டுநகர், குருக்கள்மடம் பகுதியில் C.R. W.R.C நிறுவன உதவியுடன் நிரந்தரவீடுகள் 24 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது. இவை அமைப்பதற்கான காணிகளை பெரு மனம் கொண்ட திருமதி சாமித்தம்பி அவர்கள் ஒரு ஏக்கர் காணியை இனாமாக கொடுத்து உதவினார். மிகுதி காணித் தேவைகளை கனேடிய நிறு வன உதவியுடன் வாங்கி நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டது.

இவர்களுக்கான தற்காலிக வீடுகளை I.O.M நிறுவனம் கட்டிக்கொடுத்தது. வீதிகளை உலகதரிசன நிறுவனம் அமைத்துக் கொடுத்தது பிரான்சீஸ்கன் சபையின் 10 வீட்டுக்கான உதவிகளையும் அளித்து சகல குடியேற்ற முயற்சிகளிலும் முன்நின்று உழைப்பதில் இனமத மொழிகடந்து பிரான்சீஸ்கன் சபை சகோதரர் இக்னேசியஸ் அவர்கள் தலைமையில் நிறைவு செய்யப்பட்டு வருகிறது.

10.04.2006இல் பிரான்சீஸ்கன் இலங்கை மாகாண தலைவர் ஜெரோம் கிறிஸ்ரி அவர்களால் குடியிருப்புக் கான புதிய வீடுகள் திறந்துவைக்கப் பட்டது.மேலும் 200 வீடுகளை C.R.W.R.C நிறுவன உதவியுடன் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



தகவல்: மொ.ரெசிலிக்கா

ஆன்மீகத்தில் முழு மனத்துடன் ஈடுபடுங்கள் - பரிசுத்த பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதையின் பார்வையில்.....

# வழிபாடுகள் வாழ்வாகுமா?

ஆன்மீகம் மனிதனைப் புடமிட வைக்கிறது
ஆன்மீகம் மனிதனை புனிதனாக்குகிறது.
ஆன்மீகம் எமது நாட்டின் பெரும் சொத்தாகியது.
ஆன்மீக அறிவுத் தேடல் பலராலும்
பலவழிகளில் எமது மண்ணில் பேசப்படுகிறது;
பெருவிழா எடுக்கப்படுகிறது;
இவை எல்லாம் சமயங்கள் மட்டத்தில்
சமநிலையில் பேசப்பட்டாலும்
பெருமை கொண்டாலும்
சமயங்கள் சில சமயங்களில்
சம்பிரதாய வழிபாட்டுடன் நின்றுவிட்டதா?
மதம் வாழ்வாக மாட்டாதா என
பொறுப்பு மிக்கோரும்
தமக்குள் கேட்கவே தூண்டுகிறது
எந்தச் சமயமும் மனித கொலைக்கு
உடந்தையானது அல்ல.
துன்புறும் மனிதத்தைக் கண்டு
மௌனித்து இருப்பதும் அல்ல
மற்றவர் துயர் கண்டு
துவளாத மனதில் மதம் என்பது
மதம்கொண்ட வெறிமட்டுமே.
சமயம் என்பதும் சந்தர்ப்பவாதமே.
என்பதனை உணரும் போதுதான்
அன்பின் அர்த்தங்கள் தேடப்படும்
அவை வாழ்வாகி
வாழ்வின் வெளிப்பாட்டில்
சுயநலமற்ற பிறரன்பால்
இறை அன்பை பகிரமுடியும் – அவை
மனிதத்தின் புனிதம் காக்க வாழப்படும்.
எமது பரிசுத்த பாப்பரசர் 16வது ஆசீர்வாதப்பரின்
முதல் திருமுகம் மகடவுள் அன்பாய் இருக்கின்றார்'' என
அன்பைக்குறித்த தமது முதலாவது சுற்றுமடலை
மிக ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு
அவர் எழுதியுள்ளார்.
அன்புக்கும் மனித வாழ்வுக்கும் உள்ள தொடர்பு
அவரது ஒவ்வொரு வார்த்தையிலும் பிரதிபலிக்கிறது
கிறிஸ்தவ விசுவாசத்தின் அச்சாரம் ஆணிவேர்
மற்றும் இதயம் அன்பு என்பதை மிகத்
தெளிவாக விபரிக்கின்றார்.
அவரது சுற்றுமடல் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது
முதலாவது பகுதி இறை அன்பைப் பற்றியும்
இறைவன் எவ்வாறு அன்பினால் நிரப்புகிறார்
என்றும் கூறுகிறது.
இரண்டாவது பகுதி, மனிதர் ஒவ்வொருவரும்
எவ்வாறு அன்பை பிறருடன் பகிர்ந்து
கொள்ள வேண்டும் என்று விளக்குகிறது.
"அகாப்பே'' என்னும் கிரேக்க வார்த்தையைப்
பயன்படுத்தி உண்மை அன்புக்கு
வரையறை தருகிறார்.
உண்மை அன்பு தன்னலம் நாடாது,
பிறர் நலம்விரும்பும்.
பிறர் மூலம் தன்னையும்,
கடவுளையும் கண்டு பிடிக்கும். இயேசு கிறிஸ்து
மனித உருவெடுத்து மனித குல மீட்புக்காக
தன்னையே கையளித்து,
அன்பின் அர்த்தத்தை தெளிவுபடுத்தினார்.
அதுவே உண்மை அன்பு. அது பிறருக்காக
தன்னையே கையளிக்கும்.
பிறர் மூலம் கடவுளைக் காணும் என்கிறார்.
இவை எமது வாழ்வாகினால்
எமது குழுமத்தில், குடும்பத்தில், சமூகத்தில்
என்ன மாற்றங்கள் ஏற்படுத்தும் என்பதனை
வாழ்வால் அளவிடுதலே, வெளிப்படுத்தலே
அன்பின் வெளிப்பாடாக வேண்டும்.
துறவுக்குள்ளும் வேற்றுமை
குடும்பத்துக்குள்ளும் பகைமை
சமூகத்திலும் பொறாமை
சமயங்களிடையே பிரிவினை
இனங்களிடையேயும் வன்பகை
இவற்றை மாற்ற வழிகாட்டும்
மதங்களே, மதத்தலைமைகளே,
மத பக்தர்களே பக்திச் சபைகளே
இனம், மொழி, பிரதேசங்களுக்கு அப்பால்
இந்த அவலங்கள் தீர
உங்கள் பணிகள் எவை?
பங்குகள் எவை?
முதலில் தன் வாழ்வில் ஏற்படும்
மாற்றங்கள் எவையாகலாம்?
உடனிருந்து பணியாற்றும்
அர்ப்பண உள்ளங்களே – உங்களிடம்
உள்ள வேற்றுமையில் ஒற்றுமைகாண
பாப்பிறை சொன்ன அன்பின் வழிகாட்டலுக்கு
அர்த்தமூட்டுங்கள்.
இன்றே மனதாரபிறரை ஏற்றுக் கொள்ளுங்கள்.
சமநிலை உணவருந்துதல் மட்டுமல்ல
மனந்திறந்து உறவாடுதல்,
பிறர் குறைகளை அல்ல
நிறைகளைப் பாராட்டி, குறை களைந்து
நிறைபணி வாழ்வில் சேர்ந்து பயணிக்க
பணிகள் பல காத்திருக்கிறது.
பாப்பிறையின் அறை கூவல்
அன்புக்குப் புதிய அர்த்தம் கற்பிக்கிறது.
கிறிஸ்தவன் அன்பில் வாழ வழிகாட்டுகிறது.
அன்புத் திருமுகம்
வாழ்வாக்க அழைக்கிறது
கொலைக் கலாச்சாரம் பெருகிவர
உண்மையற்ற வழிகாட்டல்
உயிர் காவு கொள்ளும் அவலங்கள்
ஏதிலி வாழ்வுகள் எங்கோ நடக்கிறது
யாரோ துன்புறுகிறார்கள் என
நல்ல கிறிஸ்தவன் எவனும்
மௌனித்து இருக்க முடியாது.
இனம், மொழி, இடம் பார்த்து
ஒதுங்கி வாழ முடியாது
முழு மனித விடுதலைக்காக
தன்னை ஈர்ந்த இறைவனின் பாசறையில்
வாழும் இதயங்களே, சமாதானம் பேசும்
காலத்தில் சுற்றுலா சென்று
இன்பத்தில் சுற்றித் துன்பத்தில் ஒதுங்கி வாழும்
போலிச் சமாதானத் தூதுவரா நீங்கள்.
எங்கே உங்கள் அன்புப் பகிர்வு.
சமாதானத்தின் பணிகள்?
ஆதரவூட்டும், ஆற்றுப்படுத்தும், நம்பிக்கையூட்டும்
தொடர்பாடல்களும், அவசரகுரல் கொடுப்புக்களாக
அவலத்தில் அருகிருக்கும் பங்கேற்றல்
தேவையான காலத்தில் உங்கள்
பிறரன்புப் பகிர்வுகளே, செபங்கள்
வழிபாடுகள், தொடர்பாடல்கள்
இறை தேடல்களாக வேண்டும்.
**"எங்கே பகையுள்ளதோ அங்கே அன்பையும்**
**எங்கே மனவருத்தம் உள்ளதோ**
**அங்கு மன்னிப்பையும்**
**எங்கே ஐயமுள்ளதோ**
**அங்கு நம்பிக்கையையும் விதைக்க''**
புனித அசிசியின் செபவழியில்
சமாதானத்தின் கருவியாக இவை வாழ்வாகி
உன்னுள்ளும், அயலிலும் பிற சமூகத்திலும்
சிந்தித்து செயற்பட
இதுவே நேரம், இதுவே காலம்
இதுவே இறைபாதையின் அழைப்புமாகும்.

# மனித உரிமைகளை மதிப்பதும், மீள் இணக்கப்பாடும் தான் சமாதானத்துக்கான வழி

மனித இனம் எப்போதும் இயற்கையாகவே அமைதியை நாடுகின்றது. மனிதன் எப்போதுமே சமாதானமாக வாழவே விரும்புகின்றான். ஆனால் இந்த இயற்கையான ஒரு ஆசையை, விருப்பை மனிதன் பலவேளைகளில் அடைய முடிவதில்லை. இதற்குப் பல காரணிகள் உண்டு. ஆனால் இந்தக் காரணிகளில் மிகவும் முதன்மையரன காரணி பகையுணர்வாகும். நாம் இந்தப் பகைமையுணர்வை வெற்றிகொண்டு ஒப்புரவாக வேண்டும், அதாவது மீள் இணக்கப்பாடு காணவேண்டும். இவை ஒப்புரவுக்கான ஓர் யாத்திரையாகும். இந்த ஒப்புரவுக்கான யாத்திரை மூன்று மட்டங்களில் நடைபெற வேண்டும். ஏனெனில் இந்தப் பகைமையுணர்வுகள் மனிதனில் மூன்று நிலைகளில் நடை பெறுகின்றன.

### மனிதன் தன்மட்டில் வெறுப்புணர்வு

முதலாவதாக ஒரு மனிதன் தனக்குள்ளேயே பகைமையுணர்வுகளை ஏற்படுத்தும் போது அவன் தன்னையே வெறுக்கின்றான். எனவே மனிதன் தன்னையேஅன்பு செய்ய முடியாத ஓர் நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

எனவேதான் வெறுப்பின் உச்சக்கட்டமாகவே அவன் தற்கொலை செய்யத் தள்ளப்படுகின்றான். எமது பகுதி வைத்தியசாலை பதிவு ஏடுகளின்படி, நாளொன்றுக்கு இரண்டு மூன்று வரையான நோயாளிகள் தற்கொலை முயற்சிகளுடன் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இது ஓர் அதிர்ச்சியூட்டுகின்ற புள்ளி விபரமாகும். எனவே இந்த நிலையில் மனிதன் முதலில் தன்னுள் உள்ள இந்த வெறுப்புணர்வில் இருந்து விடுதலை பெறவேண்டும். எனவே மனிதன் முதலில் அவன் தன்னோடு தானே ஒப்புரவாக வேண்டும். இதுவே சமாதானத்துக்கான யாத்திரையின் முதல் படியாகும்.

### மனிதன் அயலவருடன் ஒப்புரவாகுதல்

மனிதன் தனக்குள்ளே கொண்டுள்ள இந்த வெறுப்புணர்வுகளை அவன் சரிசெய்யாவிடத்து இந்த வெறுப்புணர்வுகள் தன்னுடன் வாழும் தன் சகோதரர்கள், அயலவர்களிலே அதை அவன் காட்ட முயலுகின்றான். இவ்வாறு இந்தப் பகைமையுணர்வுகளை அவன் மற்றவர்களிலே காட்டமுயலுகின்ற பொழுது அது மற்றவர்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான விளைவுகளை நாங்கள் நாளாந்தம் எம் மண்ணிலே வெளிவருகின்ற பத்திரிகைகளில் காணக்கூடியதாக உள்ளது. பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி எங்கள் உள்ளங்களை நெகிழ வைத்தது. குடும்பத்திலே ஏற்பட்ட ஒரு தகராறு காரணமாக நித்திரையில் இருந்த தன்னுடைய மனைவியை கோடரியினால் வெட்டி கணவன் கோரமாக கொலை செய்தான். இந்தச் செய்தியை வாசிக்கும் போது ஒரு மனிதன் எவ்வளவுக்கு பயங்கரமானவனாக மாறலாம் என்பதனை இந்நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது. இதுபோன்ற செய்திகள் நாளாந்தம் எங்கள் பத்திரிகைகளிலே பல எண்ணிக்கைகளிலே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எனவே இவை தனி மனிதனுக்குள்ளே அவன் வளர்த்துக் கொள்ளுகின்ற வெறுப்புணர்வுகளை அவன் ஒப்புரவு செய்யவில்லை என்றால் அந்த வெறுப்புணர்வுகள் இரண்டாம் படியாக அவன் வாழுகின்ற சமூகத்திலே இருக்கின்ற அயலவர்களில் அது வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே சமாதானத்திற்கான யாத்திரையில் இரண்டாவது படியாக ஒரு மனிதன் தன் அயலவர்களோடு கொண்டுள்ள வெறுப்புணர்விலிருந்து ஒப்புரவாக வேண்டும். இந்த ஒப்புரவு நடைபெறவில்லையென்றால் மனிதன் பல்லுக்கு பல், கண்ணுக்கு கண் என்ற போக்கில் ஒருவரை ஒருவர் பழிவாங்குகின்ற வாழ்க்கை முறையில் வாழத் தள்ளப்படுகின்றான்.

### தனிமனித பகையுணர்வு யுத்த வெறியை ஏற்படுத்தும்

மேற்கூறப்பட்ட இரண்டு நிலைகளில் மனிதன் ஒப்புரவாகவில்லையென்றால் இந்தப் பகைமையுணர்வுகள் ஒரு குழு மற்றக் குழுவுக்கெதிரான வன்முறையாகவும் ஒரு இனம் மற்ற இனத்துக்கு எதிரான வன்முறையாகவும் மாறுகின்றது. இவை இறுதியில் மாபெரும் யுத்தமாக இன்று உலகத்தில் உருவெடுக்கின்றது.

இவ்வாறான பகையுணர்விலே யுத்தங்கள் ஏற்படுகின்ற போது குறிப்பாக இன்று மனிதனை மனிதனாக மதிக்காமல் மனிதனை ஒரு பொருளாக நினைக்கின்ற நிலைப்பாடுகள் ஏற்பட்டு மனிதனுடைய அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற நிலைப்பாடுகளை இன்று நாம் உலகளாவிய ரீதியில் காணுகின்றோம். இதன் காரணமாகவே இன்று உலகத்திலே பாரிய மனித புதைகுழிகளும், சித்திரவதை முகாம்களும், இனவெறி அடக்குமுறைகளும் இன்று உலகமேடையில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. அண்மையிலே பத்திரிகை ஒன்றை வாசிக்கும் போது ஒரு சமயத்தைச் சேர்ந்த மதகுரு ஒருவர் றொயிற்றர் செய்தி ஸ்தாபனத்துக்கு கொடுத்த பேட்டியைக் கண்டேன். அவர் சொன்ன கருத்துக்கள் மிகவும் கவலை கொடுக்கும் கருத்துக்களாக அமைந்திருந்தன. ஜெனிவா பேச்சுவார்த்தைகள் நிச்சயம் தோல்வியில் முடிவடையும், மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கும். அப்பொழுது பயங்கரவாதிகள் எங்களைத் தாக்குவார்கள். அத் தாக்குதலில் இருந்து எங்களை நாங்கள் காப்பாற்றிக் கொள்ள நாங்கள் இப்பொழுது தற்காப்பு கலைகளை கற்றிருக்கிறோம். மேற்கூறியவாறு ஒரு ஆன்மீகத் தலைவர் குறிப்பிடுகின்ற போது இந்த இனவெறி எவ்வளவுக்கு கொலைவெறியை விட மேலானது என்பதனை நாங்கள் காணக் கூடியதாக உள்ளது.

எனவேதான் நாங்கள் இந்த நாட்டிலே சமாதானத்தைப் பற்றி பேசவேண்டுமென்றால் நாங்கள் சமாதானத்துக்குரியவர்களை உருவாக்க வேண்டும். அதுவே மதங்களின் முக்கியமான நோக்கமாக அமைய வேண்டும். எனவேதான் இயேசு தன்னுடைய சீடர்களை பணிசெய்ய அனுப்பிய பொழுது அவர் சொன்ன வார்த்தைகள் மிக முக்கியமானவை. நீங்கள் ஒரு ஊருக்குப் போகும் போது சமாதானம் என்று சொல்லுங்கள். சமாதானத்துக்கு உரியவர் அங்கிருந்தால் உங்கள் சமாதானம் அவருடன் தங்கும், இல்லையேல் அது உங்களிடம் மீண்டும் வந்து விடும். ஆகவே சமாதா னத்துக்குரியவர்கள் என்றால் யார்? இந்த ஒப்புரவை தங்களுடைய வாழ்க்கையில் மேற்கொண்டவர்கள். அதாவது தன்னுள் தனக்கெதிராக இருக்கின்ற பகைமையுணர்வுகளில் இருந்தும், அயலவர்களுக்கெதிராக தன்னுள் உள்ள பகைமையுணர்வுகளில் இருந்தும், இன்னும் ஒரு இனத்துக்கு, ஒரு குழுவுக்கெதிரான பகைமையுணர்வுகளில் இருந்தும் விடுதலை பெற்று ஒப்புரவாகியவர்களே ஆவர்.

### மனிதனால் ஒப்புரவாக முடியுமா?

நம் திருத்தத்தை வெளியிட்ட 'கடவுள் அன்பாக இருக்கின்றார்' என்ற முதலாவது திருமுகம் இந்த ஒப்புரவுக்கான வழியை நமக்கு வெளிக்காட்டுகின்றது. இந்த திருமுகத்தை எழுதியதன் நோக்கத்தைப்பற்றி அவர் தன் முன்னுரையில் குறிப்பிடுகையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'இன்றைய உலகில் கடவுளின் பெயரால் வன்முறைகளும், பகைமையுணர்வுகளும் வளர்க்கப்படுகின்றன. எனவே இத்திருமடல் வெளிப்படுத்துகின்ற அன்பைப் பற்றிய செய்தி மிகவும் முக்கியமானதாகவும் தற்காலத்திற்கு மிகவும் தேவையானதொன்றாக அமைகின்றது.' திருத்தந்தையினுடைய வார்த்தைகளை நாங்கள் சிந்திக்கின்றபோது அவை நமக்கு ஆழ்ந்த சிந்தனைகளைக் கொடுக்கின்றன. சிறப்பாக அவருடைய செய்தி எம் நாட்டுக்கு மிக மிக முக்கியமான தொன்றாகும். இன்று உலகத்தின் பல நாடுகளில் நடைபெறுகின்ற போர்களை எடுத்துப் பார்க்கின்ற போது அதனுடைய மூல காரணம் ஒரு மதமாக இருப்பதை நாங்கள் காண்கின்றோம். ஏன் நம் நாட்டில் கூட பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்களுக்கும், சொத்தழிவுகளுக்கும் அடிப்படையில் இருப்பது ஒரு மதப் பிரச்சனையே. எனவே தான் மதங்கள் 'மதம்' கொள்ளாமல் ஒப்புரவுக்கான வழியை மனிதனுக்கு காட்ட வேண்டும்.

எனவேதான் ஒப்புரவு என்பது எம் வாழ்வில் நடைபெற வேண்டுமாயின் அதற்கு மிகவும் ஆழமான ஆன்மீக சக்தி தேவைப்படுகின்றது. இந்த ஆன்மீக சக்தியை மனிதன் கடவுளிடமிருந்தே பெற்றுக் கொள்கின்றான்.

### கடவுள் அன்பானவர்

கடவுள் யார் என்று நான் அறிகின்ற போது தான் மனிதன் யார் என்று கண்டு கொள்ள முடியும். எனவே மனிதனின் மிகப் பெரும் கண்டுபிடிப்பானது கடவுள் அன்பாகவே இருக்கிறார் என்பதேயாகும்.

இந்த அன்பைப் இன்று நற்செய்தி இவ்வாறு கூறுகின்றது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார். இந்த வார்த்தைகள் கடவுள் எந்தளவுக்கு நம்மை அன்பு செய்தார் என்பதை நமக்கு தெளிவாக்குகின்றது. எனவே இந்த அன்பை ஒரு மனிதன் உணர்கின்றபோது அவனுடைய கண்ணோட்டங்கள், பார்வைகள், உணர்வுகள் வித்தியாசமாக உருவெடுக்கின்றன. இதைப் பற்றி குறிப்பிடுகையில் அவர் தன் திருமடலில் "கடவுளில் கடவுளோடு எனக்கு தெரியாத நான் விரும்பாத ஒரு மனிதனைக் கூட என்னால் அன்பு செய்ய இயலும்... இயேசுவினுடைய நண்பர் என்னுடைய நண்பர்''. எனவே ஒரு சமாதானம் நோக்கிய யாத்திரையிலே ஒப்புரவு அல்லது மீள் இணக்கப்பாடு தேவை என்று கருதுகின்ற போது மேற்குறிப்பிட்டுள்ள திருத்தந்தையின் வார்த்தைகள் மிக மிக முக்கியமானவை. மதங்கள் இறை வன் அன்பானவர் என்பதை வெளிப்படுத்தி அதனூடாக மதவெறியைக் களைந்து அன்பின் வற்றாத ஊற்றுக்களை மனித இதயங்களிலே அணை கடந்த வெள்ளமாகப் பாய விடுகின்ற நிலை ஏற்படுகின்றபோதுதான் அது சமாதானத்திற்கான ஒரு பயணமாக உருவெடுக்கும்.

நாம் நமக்குள் நமக்கெதிராக, அயலவருக்கெதிராக, சமூகங்கள் இனங்களுக்கெதிராக, பாலூட்டி வளர்த்த பகைமையுணர்வுகள் என்கின்ற பேய்களை நம் மனங்களில் இருந்து விரட்டியடித்து ஒப்புரவுப் பாதையில் பயணித்து சமாதானத்தை இந்த மண்ணிலே நிலை நாட்ட சமாதானத்திற்கு வலுவூட்டுகின்ற மக்களாக நாம் வாழ முயலுவோம். இந்த யாத்திரை ஒரு இலகுவான யாத்திரையல்ல, மிகவும் ஒரு கடினமான யாத்திரையாகும். சிலுவையிலே தொங்கிய இயேசு தந்தையே இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள், இவர்களை மன்னியும். என்று கூறி மன்னிப்பின் வழியை நமக்கு காட்டி நின்றார். மன்னிப்பு இல்லாமல் ஒப்புரவு, சமாதானம் கட்டியெழுப்பப்பட முடியாது என்பதனை நாம் உணருவோம். எனவே இந்த மண்ணின் சமாதானத்துக்காக செபிக்கின்ற வேளையில் நாம் வரலாற்றின் பிழைகளை ஆராய்ந்து மனம் வருந்தி, ஈடு செய்து புதிய தொடக்கங்களை ஆரம்பித்து சமாதான பாதையில் நம் மண் தொடர்ந்து நடைபயில இறைபதம் வேண்டி சமாதானப் பாதையை செப்பனிட்டு பயணிப்போம்.

அருட்பணி ம.டேவிட்

## நீர்

கல்லும் மலையும் குதித்து வந்தேன்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும்
இறங்கி தவழ்ந்து நான் வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன் – அதில்
கண்குளிரப் பயிர் கண்டு வந்தேன் ஆயும்
மலர்ப்பொழில் செய்து வந்தேன் – அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சிய வரிகள்

## புனித பிரான்சீஸ் அசீசி சபையின் பாசறையில் சகோதரர்கள் உருவாக்கிய நட்சத்திரம்

புனித பிரான்சிஸ்கு அசீசியாரின் சபையினர் சமூகத்திற்கு ஆற்றிவரும் பணிகள் மிகவும் மகத்தானவை. அப்பணிகளுள் ஒழுக்கநெறியோடு கூடிய கல்விப் பணியும், அர்ப்பண சிந்தனையுடன் ஆற்றும் அநாதைச் சிறுவர் இல்லப் பணியும் தலையாயவை

கொழும்பு தமிழ்ச் சங்கம் கே.என்.டிபீரிஸ் அவர்களுக்கு சங்கச் சான்றோன் விருது அளிக்கிறது.

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் அருட்திரு சகோதரர் கொன்சால்வேஸ் அவர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து, இலங்கையில் இருந்த கொடைவள்ளல்களாகிய உயர்திரு.ஜ.எக்ஸ்பெரேரா, எம்.பி. கோமஸ், எஸ்.பிறிட்டோ ஆகியவர்களின் உதவி பெற்று மக்கோனாவில் புதிய ஜோன் பொஸ்கோ எனும் பெயரில் பரதகுல அநாதைச் சிறுவர்களுக்காக ஒரு மடத்தை ஆரம்பித்தார். தென்னிந்தியாவிலுள்ள தூத்துக்குடி, மணப்பாடு, கன்னியாகுமாரி என்னும் இடங்களிலிருந்து பத்துப் பன்னிரண்டு அநாதைச் சிறுவர்களை அழைத்துவந்து ஆரம்பித்தார். இந்த மடத்தின் நிர்வாகத்தை புனித பிரான்சிஸ்கு அசீசியாரின் சபைச் சகோதரர்கள் மனமுவந்தேற்று அர்ப்பண சிந்தனையுடன் அநாதைச் சிறுவர்களைப் பராமரித்தனர். இவர்களுள் அருட்சகோதரர் எஸ்.சைமன் பெர்னாண்டோ, அ.ச.பீற்றர், அ.ச.பிரான்சிஸ், அ.ச.கிளமன், அ.ச.இன்னாசியு, அ.ச.வின்சன்டிபோல், அ.ச.போல் பீரிஸ் குறிப்பிடத்தக்கவர்கள். அ.ச.சைமன் பெர்னாண்டோ, அ.ச.போல் பீரிஸ் என்பவர்கள் கொழும்பு, நீர்கொழும்பு, கொச்சிக்கடை, சிலாபம், கருக்குப்பனை, புத்தளம், மன்னார் போன்ற பகுதிகளிலிருந்து பரதகுல அநாதைச் சிறுவர்களை அழைத்து வந்து மடத்தில் சேர்த்துக்கொண்டனர். மொத் தம் 20, 25 சிறுவர்கள் அங்கே காணப்பட்டனர்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் தாக்கம் இலங்கையை மிகவாகப் பாதித்தது. இலங்கைக்கு ஜப்பானியர் குண்டுபோட்ட காலம். நாட்டிலே மிகவும் பாரதூரமான உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அநாதைச் சிறுவர்களுக்கு உணவு கொடுப்பதில் மிகுந்த கஷ்டம் உண்டானது. அமெரிக்காவில் விலங்குகளுக்குக் கொடுக்கப்படும் ஒருவகைத் தானியமே மடத்து அநாதைப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது. பட்ட கடனைச் செலுத்த முடியாமல் மடத்து நிர்வாகிகள் இக்கட்டான நிலையில் இருந்தபோது; கடனுக்குப் பொருள்களைக் கொடுத்த சிங்களக் கடை முதலாளிமார் கடனைப் பெறுவதற்காக மடத்துக்கு வந்தபோது, அநாதைச் சிறுவர்கள் உண்பதற்கு எதுவுமின்றி விலங்கு உணவுகளை உணவாக உண்பதைக் கண்ட சிங்கள முதலாளிமார் கடனைப் பெறாது, மேலும் இலவசமாக உணவுப் பொருள்களை வழங்கினர். இந்நிலையில் நீர்கொழும்பு முன்னக்கரையைப் பிறப்பிடமாகக் கொண்ட கே.என்.டி.பீரிஸ் என்னும் அநாதைச் சிறுவன் மடத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். கல்வியில் ஊக்கமும், கருசனையும், விவேகமும் கொண்ட பீரிஸ் அந்நாளில் நடைபெற்ற கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையி லும் முதற் தரமாகச் சித்தி பெற்றார். அநாதை மடத்தில் இரண்டு வருடங்கள் மட்டுமே பிரான் சிஸ்கன் அருட்சகோதரர்கள் வழிகாட்டலில் இருந்த போது முழு வாழ்க்கைக்கும் வேண்டிய சகல பண்புகளையும் கொண்ட வாழ்க்கைக்குரிய உறுதியான அத்திவாரம் அங்கே இடப்பட்டது. பின்பு இவர் யாழ்.கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்த்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

பல இன மக்களும் ஒற்றுமையாக வாழும் நீர்கொழும்பு பிரதேசத்தில் பிறந்த பீரிஸ் அவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கில மும்மொழிகளிலும் திருத்தமாகப் பேசும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இயற்கையாகவே அவருக்கு சிறந்த குரல்வளம் அமைந்திருந்தது. ஆசிரியர் பயிற்சி முடிந்த பின்னர் பீரிஸ் அவர்கள் கொழும்பிலுள்ள புனிதவளனார் கல்லூரியில் ஆசிரியரா கச் சேர்ந்தார். இக் கல்லூரியில் அவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பித்தார். பாடசாலை விட்டபின்னர் மாலை நேரங்களில் மும்மொழிகளிலும் தனியார் வகுப்புகளை நடாத்தினார். அந்நாளில் மிகவும் புகழ்பெற்றிருந்த அற்லஸ் ஹோல்தபால் கல்லூரியில் சேர்ந்தார். அங்கே அவர் தமிழ்ப் பிரிவு ஒன்றை ஆரம்பித்தார். அதன் மூலம் சிரேஷ்ட தராதரப்பத்திர பரீட்சை ஆசிரியர் கலாசாலை பிரவேசப் பரீட்சை, எட்டாம் வகுப்பு புலமைப் பரீட்சை, எழுதுவினைஞர் பரீட்சை போன்றவை களுக்காய் அநேக பாடநூல்களை எழுதி வழங்கினார். இலங்கையின் வரலாற்றிலேயே முதன் முறையாக சிங் கள தமிழ் அகராதி ஒன்றையும் தமிழ் சிங்கள அகராதி ஒன்றையும் வெளியிட்டு பெரும் சாதனை படைத்தார். சிங்கள தமிழ் அகராதியை எமது அரசாங்கமும் தமிழ் சிங்கள அகராதியை சுவீடன் அரசாங்கமும் ஏற்று வெளியிட்டனர். இந்த இரண்டு அகராதிகளும் அரசாங்க விருது பெற்றன.

சிறந்த குரல் வளமுடைய பீரிஸ் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத் தாபனத்தில் சேர்ந்து தமிழ் மூலம் சிங்களம், சிங்களம் மூலம் தமிழ் எனும் இரண்டு நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து 35 வருடங்கள் நடாத்தி சாதனை பெற்றார். கல்விய மைச்சின் பாடவிதான அபிவி ருத்தி நிலையத்தில் சேர்ந்து, தொடர்ந்து 20 வரு டங்கள் அங்கே சேவை செய்தார். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தில் தமிழ் மூலம் சிங்களம் எனும் நிகழ்ச்சியையும், தொலைக் காட்சி சேவையில் நாம் தமிழ் பேசுவோம் எனும் நிகழ்ச்சியை ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக நடாத்தினார். பீரிஸ் அவர்களின் தமிழ் மொழியறிவை அறிந்த பரீட் சைத் திணைக்களம் க.பொ.த (சா.த) தாய் மொழி, 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை தமிழ் விடயங்களின் பிரதம கட்டுப்பாட்டு[illegible]சகராக நியமித்தது. அப்பணியினை நேர்மையாகவும், சிறப்பாகவும் நடாத்தி எல்லோருடையவும் பாராட்டையும் பெற்றார். மேல் மாகாண சபையிலும் இலங்கைப் பாராளுமன்றத்திலும் சமகால உரை மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றினார்.

பீரிஸ் அவர்களின் தமிழ், சிங்கள மொழிச் சேவைக்காக கலாசார அலுவல்கள் அமைச்சு அவருக்கு கலாபூஷண விருதளித்து கௌரவித்தது. அவர் இயற்றிய தமிழ் - சிங்கள, சிங்கள - தமிழ் அகராதிகளுக்காக இலங்கை அரசாங்கம் விருது அளித்து கௌரவித்தது. அவருடைய தமிழ் - சிங்கள பணிக்காக கல்வி அமைச்சு விருது அளித்து கௌரவித்தது. கொழும்பு தமிழ்ச் சங்கத்திற்கு ஆற்றிய சேவைக்காக சங்கச் சான்றோன் என்னும் விருதளித்து கௌரவித்தது.

சிங்கள தமிழ் அகராதியின் முதற் பிரதியை திரு.பீரிஸ், முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுக்கு வழங்குகிறார்.

இவ்வாறாக தனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் நேர்மையாகவும், அர்ப்பண சிந்தனையுடனும் பணியாற்றும் சக்தியையும், அமைதியான வாழ்க்கையையும் பெறுவதற்கும் உரிய முறையில் தன்னை உருவாக்கிய புனித பிரான்சிஸ்கன் சபையினருக்கும் தனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

# உன் வாழ்வுக்கு அர்த்தம் கொடு

நல்லதை நினைத்து நல்லதை செய்தல்
நல் வழிகாட்டிகளின் நற்சிந்தனை ஆகும்.
இச் சிந்தனைகள் மட்டும் செயல்வடிவம் ஆவதில்லை
அதற்கான திட்டமிடலும் தூரநோக்கு பார்வையும்
காலத்துக்கு காலம் மாற்றம் பெறும் போது எமது
இலக்குகள் கண்ணுக்கு தெளிவாக தெரிந்தால்
எம்மை மீட்டுப் பார்ப்பதில் எம் தேடல்
எமக்குள் தொடர வேண்டும்.
எல்லாம் தெரியும் எனக்கு நான் செய்வது எல்லாம் சரியே
என முரண்டுபிடித்தால் தோல்விகளை, சவால்களை
சாட்டாக சொல்லியே ஒதுக்குவோர்,
ஒதுக்கப்படுவோர் பலர்.
இதனால் தன்னை வெறுத்து மற்றவர் கருத்தை ஏற்க
மறுக்கின்றனர், வெறுக்கின்றனர்,
புரிந்துணர்வை இழக்கின்றனர்.
இதில் இருந்து மாற்றம் பெற
எனது வாழ்வுக்கு சுயமதிப்பீடு அவசியம் ஆகின்றது.

நீ நம்பு உன் அழகை அல்ல
உன் ஒவ்வொரு அனுபவங்களையும்
உன்னில் நீ நம்பிக்கை வை
உலகம் உன்னில் நம்பிக்கை வைக்கும்
எம்மை ஏற்று விளங்கி கொள்பவரை
நாம் ஒதுக்கும்போது, வேறு யார்தான் எம்மை ஏற்பர்.
உன்னை நீ ஏற்றுக்கொள்
பிறரும் உன்னை ஏற்க வழிபிறக்கும்
தோல்விகள் எமக்கு பாடம்
ஒவ்வொரு தடைகற்களும், வெற்றிகளும் எமக்கு சவால்!
உன்னில் உள்ள நல்லவற்றை இனங்காணலில்
உன் தேடல் தொடங்கும்.
சந்தர்ப்பங்கள் எமக்கு தரப்படுகின்றன
அதை நாம் விலக்கிவிட்டால் மீண்டும் அடையமுடியாது.
காலம் எப்போதும் எமக்காக காத்து இருப்பது இல்லை
தீயனவற்றை இனம் கண்டு அவற்றை அகற்ற
எம் தேடல் எமக்குள் தொடரவேண்டும்.
தவறை ஏற்கும் போதுதான் அதில் இருந்து
விடுபட வழிபிறக்கும்
பிறரிடம் எதிர்பார்க்கும் எதுவும் உன்னிடம் உள்ளதா
சொல்வது அல்ல செய்வதில்
தீர்மானிப்பதில் மட்டும் அல்ல நிறைவேற்றுவதில்
இதுவரை செய்ததை அனுபவமாக்கி
செயல்படுத்துவதில் திட்டமிட்டு
செயல்படுவதை தினம் மதிப்பிடு
உன் வாழ்வுக்கு அர்த்தம் கொடு
எமது வாழ்வில் தேடல் தொடரவேண்டும்
தேடலை தேடும் போது அதில் ஒரு ருசி இருக்கும்
ருசி இருந்தால் தான் பசியின் அருமை தென்படும்
உலகமும், உன்னை சூழ்ந்து இருப்பவர்களும்
ஆயிரம் பேசட்டும்
உனக்கு நீ உண்மையாய் வாழ்ந்திடு
உனக்கு நீ உண்மையாய் இருந்திடு.

திருச்சிலுவை கன்னியர் மடம்,
[illegible]

## மூன்றெழுத்தில் வார்த்தை

உயிர் மூன்றெழுத்து, உயிரை இயக்கும்
சக்தி மூன்றெழுத்து, சக்தியின் வடிவம்
அன்னை மூன்றெழுத்து, அன்னை காட்டும்
அன்பு மூன்றெழுத்து, அன்பை உயர்த்தும்
அறிவு மூன்றெழுத்து, அறிவை வளர்க்கும்
பள்ளி மூன்றெழுத்து, பள்ளியில் கற்கும்
கல்வி மூன்றெழுத்து, கல்வி தரும்
பதவி மூன்றெழுத்து, பதவியை கற்பிக்கும்
இளமை மூன்றெழுத்து, இளமை தரும்
மணம் மூன்றெழுத்து, மணத்தால் இணையும்
மனைவி மூன்றெழுத்து,மனைவியால் உருவாகும்
மழலை மூன்றெழுத்து, மழலைக்கு செலவாகும்
பணம் மூன்றெழுத்து, பணத்தைத் தேடும்
கைகள் மூன்றெழுத்து, கைகள் சோரும்
முதுமை மூன்றெழுத்து, முதுமையின் பின்
பெட்டி மூன்றெழுத்து, பெட்டியில் அடங்கும்
பிணம் மூன்றெழுத்து, பிணம் செல்லும்
ஊர்தி மூன்றெழுத்து, ஊர்தி செல்லும்
சுடலை மூன்றெழுத்து, சுடலையில் வைக்கும்
கொள்ளி மூன்றெழுத்து, கொள்ளியில் எரிந்த
அஸ்தி மூன்றெழுத்து, அஸ்தி கரையும்
கடல் மூன்றெழுத்து.

அ.அருண்ராஜ்,
தரம் – 06,
வ/செட்டிகுளம் மகாவித்தியாலயம்.

## சமாதானமே நீ எங்கே?

ஏன் தினமும் எங்களை ஏமாற்றுகிறாய்?
நிலையான சமாதானமாய்
எப்போது வருவாய்?
உன்னைக் காணாமல் ஏங்குகிறோம்
தினமும் எங்களை யுத்தம் வாட்டுகிறது.
நீ வருவாய் என்று எதிர்பார்த்து
எத்தனையோ நாட்கள்
ஏமாந்து விட்டோம்
ஏங்கித் தவிக்கின்றோம்
எப்போது வருவாய்
விரைவில் வருவாய்
நிரந்தர சமாதானமாய் இருப்போம்.

ர.சிந்துஜன், தரம் - 4B,
வடரிகுளம்.

எஸ்.பி.ரமேஸ்ராஜா தரம் – 09
புனித பிரான்சிஸ்கன் சிறுவர் இல்லம், விகார வீதி, மாத்தளை

**நண்பர்களோடு மட்டுமல்ல பகைவர்களுடன் சமாதானத்தைப் பகிருங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியின் நற்செய்தி

நற்செய்தியில் லூக்காஸ் எழுதிய நற்செய்தி ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. இத்தனிச்சிறப்பு நற்செய்தியின் இன்னுமொரு அம்சம் மகிழ்ச்சியின் நற்செய்தியாக நூலாசிரியர் எடுத்துக் காட்டுவது இச்செய்தி தனது நூலில் மகிழ்ச்சிபற்றி அள்ளித்தரும் அரும் கருத்துக்கள் அளப்பரியவை.

மனித இனம் முழுமைக்கும் மீட்பு சொந்தமானது. நற்செய்தி யாவருக்கும் பறைசாற்றப்பட வேண்டும். மனித இனம் முழுமைக்கும் மீட்புண்டு என்ற மகிழ்ச்சியின் செய்தியாக இந்நூல் அமைகிறது என்று சொன்னால் மிகையாகாது. இந்த முக்கிய அம்சமாகிய மகிழ்ச்சி மற்ற செய்திகளில் காணப்படுவதை விட பல்வேறு இடங்களில் லூக்காஸ் குறிப்பிடுவதை நாம் காணக் கூடியதாயிருக்கிறது. லூக்காஸ் 1/5.. யோவானின் பிறப்பு அவர் தந்தைக்கு அறிவிக்கப்பட்டதே ஒரு மகிழ்ச்சியானதாய் அவருக்கு அமைந்தது.

வயதான சக்கரியாஸிற்கும் அவர் மனைவிக்கும் மகன் பிறப்பான் "நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர் அவரது பிறப்பால் பல ரும் மகிழ்ச்சியடைவர்" என்ற மகிழ்ச்சியை தனது ஆரம்பமாக தன் நூலில் ஆரம்பித்து வைக்கிறார். மீட்பு மனித இனம் முழுவதிற்கும் உண்டு அதன் ஆரம்பகட்டமாக மீட்பரின் தாயாக மரியாள் தேர்ந்தெடுக்கப்பட்டு கபிரியேல் தூதனால் வாழ்த்தப்பட்டு அந்த மகிழ்ச்சியின் செய்தி மரியாளுக்கு அளிக்கப்படுவதை (1/28) நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

மகிழ்ச்சியை தன் நூலில் தொடர்ந்தும் தந்து கொண்டேயிருப்பதை நாம் மீண்டும் காணலாம். மரியாள் எலிசபேத்தை சந்தித்து வாழ்த்திய வாழ்த்தைக் கேட்டு வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று (1/14) என்று நூலாசிரியர் மிகத்தெளிவாக குறிப்பிடுகிறார். எனவே மரியாளின் வாழ்த்து எலிசபேத்திற்கு மட்டுமல்ல அவள் வயிற்றிலிருந்த குழந்தை யோவானுக்கும் மகிழ்ச்சி யாக அமைகின்றது. அதன் தொடர்ச்சியாக மரியாளின் பாடல் மகிழ்ச்சியின் (1/46 - 55) புகழ்ச்சியாக, போற்றுரையாக மலர்கின்றது.

அடுத்ததாக யோவானின் பிறப்பால் சுற்றி வாழ்ந்தோரும் உறவினரும் எலிசபேத்துடன் சேர்ந்து மகிழ்ந்தனர் (1/58) என்றும், யோவான் பிறப்பால் அவரது வம்சமே மகிழ்ச்சியில் திளைத்தது என்று தன் நூலில் நூலாசிரியர் மகிழ்வாய் காட்டுகின்றார். இதைத் தொடர்ந்து எசக்கரியாவின் பாடல் மகிழ்ச்சியின், புகழ்ச்சியின் பிரதிபலிப்பாக அமைகிறது. எனவே நூலாசிரிய ரான லூக்காஸ மகிழ்ச்சியின் மகத்துவத்தை அடுக்கிக்கொண்டே போகிறார். அவரது நூலில் பல்வேறு இடங்களில் நாம் இதைக் காணலாம்.

அடுத்ததாக யேசுவின் பிறப்பு, அதாவது மீட்பரின் பிறப்பு, இடயர்களுக்கு "மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். "இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்", என்ற நற்செய்தியின் சாரம்சம் மகிழ்ச்சியின் முக்கியத்துவமாக அமைகிறது என்றால், லூக்காஸ் மகிழ்ச்சி வாழ்வான கிறிஸ்தவ வாழ்விற்கு எத்தகைய உதாரணமாயிருப்பார் என நாம் சொல்லாமலே தெள்ளத்தெளிவாய் விளங்குகிறது.

பிறப்பின் மகிழ்ச்சி செய்தியை தொடர்ந்து வானதூதர்களின் மகிழ்ச்சிக்கானம் இடம்பெறுகிறது (2/13) ஆம், மீட்பரின் பிறப்பால் வானதூதர் மகிழ்ச்சிப் பேருவகை கொண்டு

**டி.புஸ்பவானர்,**
**இ/மரியோவான் மகா வித்தியாலயம்**

மகிழ்ச்சிக்கானம் இசைப்பதைக்காணும் போது லூக்காஸ் தன் நூலில் மகிழ்ச்சிக்கு எவ்வகையான முக்கியத்துவம் அளித்திருக்கிறார் என்று நாம் சொல்லாமலே விளங்குகிறது.

மகிழ்ச்சியின் தொடர்ச்சியாக மீட்பரைக் கையேந்தி சிமியோன் பாடிய பாடல் (2/29-32) புகழ்ச்சியாக அமைகிறது. அதைத் தொடர்ந்து அன்னாவும் மீட்பரின் வரவால் மகிழ்ச்சியுற்று கடவுளைப் புகழ்ந்து (2/38) எல்லோரிடமும் அக்குழந்தையைப் பற்றி பேசியதை நாம் காணக் கூடியதாயிருக்கிறது.

யேசுவின் போதனைகள், உவமைகள், புதுமைகள் அவர் கொணர்ந்த மீட்பின் மகிழ்வை அடித்தளமாகக் கொண்டிருப்பதை நாம் இன்னும் தொடர்ந்து காணலாம். குணமாகிய முடக்குவாதமுற்றவன் தான் குணமான மகிழ்ச்சியில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தவாறே (3/25) தன் வீட்டிற்கு போனதையும், இதைக் கண்ட யாவரும் மெய்மறந்தவராய் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர் என்றும் லூக்காஸ் மகிழ்ச்சியின் உச்சக்கட்டமே புகழ்ச்சி என்று தெட்டத்தெளிவாய் எடுத்துக் காட் டுகிறார்.

எழுபத்திரண்டு சீடரையும் இயேசு அனுப்பிய சம்பவத்தில் அவர்கள் சென்று தாம் செய்தவைகளைப் பற்றி திரும்பி வந்து இயேசுவிடம் கூறிய போது இயேசு "தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழவேண்டாம். மாறாக விண்ணகத்தில் உங்கள் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றி மகிழுங்கள் (10/20) என்ற உண்மையை லூக்காஸ் மிக முக்கியமாக இச்சம்பவத்தில் எடுத்துரைக்கின்றார்.

உண்மை மகிழ்ச்சி நாம் எதைச் செய்வதில் அல்ல யாருக்காக செய்கிறோம் என்பதில் தங்கியுள்ளதென்பதை நூலாசிரியர் தெளிவாய்க்காட்டுகிறார். இயேசு தூய ஆவியால் பேருவகை (10/21) அடைவதையும் அதாவது தன் சீடர்கள் பொருட்டு அவர்களது பணியின் பின் தூய ஆவியால் பேருவகை கொண்டு "தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே. என்று தந்தையின் மகத்துவத்தை எடுத்தியம்புவதை நாம் காண்கிறோம்.

மீண்டும் லூக்காஸ் தன் மிக முக்கிய உவமைகளான காணாமற்போன ஆடு, காணாமற்போன திராக்மா, காணாமற்போன மகன் என்ற சம்பவத்தில் உண்மை மகிழ்ச்சி விண்ணில் எதனால் உண்டாகும் என்று எடுத்தியம்புகிறார். காணாமற்போன ஆட்டை கண்டெடுத்த மகிழ்ச்சியை விட, மனம்மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என்று (15) ஒப்பிட்டுக் கூறுகிறார். மீண்டும் காணாமற்போன திராக்மா உவமையில் பெண் ஒருவர் திராக்யா கண்டெடுத்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியைப் போல, "அவ்வாறே மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என்ற மகிழ்ச்சியை தொடர்ந்தும் லூக்காஸ் ஒப்பிட்டுக் காட்டுவதை நாம் காண்கிறோம்.

இம் மகிழ்ச்சி அடுத்தபடியாக காணாமற்போன மகன் உவமையில் உச்சக்கட்டம் அடைவதை நாம் காணலாம். மனம் திரும்பி வந்த தன்மகனுக்கு "மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம் (15/23) என தந்தை பணியாளருக்கு கூறுவதையும் அதன் தொடர்ச்சி யாக மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள் (15/24) என்றும் நூலாசிரியர் விரிவாய்க் கூறுவதை நாம் காணலாம். அதுமட்டுமல்ல மூத்த மகனின் முறைப் பாட்டை தந்தை பெரிதாய்க் கருதாமல் "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய், என்னுடையதெல்லாம் உன்னுடையதே, இப்போது நாம் மகிழ்ந்து கொண் டாடி இன்புற வேண்டும், ஏனெனில் உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர் பெற்றுள்ளான் காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான் (15/31-32) என்ற தந்தை தன் உண்மையான மகிழ்ச்சியின் காரணத்தை தன் மூத்த மகனுக்கு எடுத்தியம்புவதை லூக்காஸ் அழகாக வரைந்து மகிழ்ச்சியின் படிகளை ஏற்றிக் கொண்டே போகின்றார் என நாம் மகிழ்வாய் காணக்கூடியதாயிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மிக உச்சக்கட்ட மாக இயேசுவின் விந்தை மிக்க செயல்கள் கண்டு மகிழ்ச்சி மிக்க வியப்பெய்துகின்றனர் மக்கள் (13/17) என்று லூக்காஸ் காட்டுகின்றார். இயேசுவின் நிமித்தம், அவர் போதனைகள், புதுமைகள் நிமித் தம் மனுக்குலமீட்பு பெற்றுவிட்டது. போன்ற மகிழ்ச்சி மக்களிடையே நிலவுவதை நூலாசிரியர் காண்பிப்பதை நாம் தெளிவாக காண்கிறோம். எனவே இயேசுவின் வருகை, அவர் கொணர்ந்த நற் செய்தி மனுக்குலம் முழுவதிற்கும் மகிழ்ச்சிமிக்கதாயிற்று என்று கூறுவதில் வியப்பில்லை. இதுவே நூலா சிரியரின் முக்கிய அடுத்த அம்சமாக மகிழ்ச்சி மகிழ்வாய்த் தொனிப்பதை நாம் மறக்கமுடியாது.

அடுத்ததாக இயேசுவால் அழைக்கப்பட்ட சக்கேயு மரத்திலிருந்து விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச் சியோடு இயேசுவின் வரவு புறவினத்தானான சக்கேயுவிற்குக் கூட மகிழ்ச்சி அளித்ததையும், மீட்பரான இயேசுவின் வரவு மனுக்குலம் முழுவதிற்கும் மகிழ்ச்சியூட்டும் மீட்பாக அமைவதையும் நூலாசிரியர் தத்துவருபமாய்க் காட்டுவதை நாம் காண்கிறோம்.

மகிழ்ச்சியின் இறுதிக் கட்ட மாக இயேசுவின் உயிர்ப்பும், விண்ணேற்பும் சீடர்களுக்கு அமைவதாக லூக்காஸ் நற்செய்தியின் முடிவுரை அமைகிறது. (24/41) "உங்களுக்கு அமைதி உரித்தாகுக என இயேசுவின் வாழ்த்தையும் அவரின் தரிசனத்தையும் கண்ட சீடர்கள் மகிழ்ச்சி மேலிட்டு, நம்ப முடியாதவர்களாய், வியப்புக்குள்ளாகி இருந்தார்கள் எனக் கூறும் லூக்காஸ் இயேசுவின் விண்ணேற்பில் ஆசிபெற்ற அப்போஸ்தர்கள் பெரும் மகிழ்ச்சியோடு ஜெருச லேம் திரும்பிச் சென்றார்கள். (24/52) என்று கூறிதன் நற்செய்தியை மிக அழகாக முடிக்கிறார். அது மட்டுமா அவர்கள் கோவிலில் எப்போதும் கடவுளைப் போற்றியவாறு இருந்தார்கள் (24/53) எனக்கூறி தன் நற்செய்தியில் மகிழ்ச்சிக்கு மணியாக முக்கியத்துவம் கொடுத்து மானிட மகனின் வரவால் மனுக்குலமே மகிழ்ச்சியடைந்தது என்று தன் மகிழ்ச்சியின் நற்செய்தியை எழுதி முடிப்பதை நாம் விரிவாகக் காண்கிறோம்.

எனவே தன் நற்செய்தியில் மகிழ்ச்சிக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுத்த லூக்காஸ் எவ்வளவு மகிழ்ச்சி மிகுந்த நூலாசிரியர் தன் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்திருப்பார். அதே மகிழ்ச்சியை நாமும் பெற்று வாழ அழைக்கும் அந் நற் செய்திக்கு செவிமடுத்து என்றும் மகிழ்ச்சியாய் வாழ்வோம் என திடசங்கற்பம் கொள்வோம். எம் வாழ்வில் மகிழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.



கலிஸ்ரன் அன்ரனி,
தரம் – 08
கிளிநொச்சி (பாசச்சோலை)


ஞா.பிரசாந்,
தரம் – 7
இருபாலை


ஜீ.நிறோசன்,
தரம் – 08
நவாலி (பாசச்சோலை)


எல்.உஷா நில்மினி,
தரம் – 10
நின்தானி, புத்தளம்

## நல்லொழுக்கம் பேணுவோம்

*பிள்ளைகளே இரைச்சல், சத்தம் சந்தடிகள் உள்ள இடங்களில் நீங்கள் அதிகநேரம் உட்கார்ந்து இருக்கவேண்டாம். நகருக்குள் இருக்கும் வாகனச் சத்தம், ஆட்களின் இரைச்சல், ஒலிபெருக்கிகளின் இரைச்சல் சத்தங்களுக்குள் நெடுநேரம் அமர்ந்து இருக்க வேண்டாம். இவைகள் உங்கள் உடலுக்கும், நல் ஆரோக்கியத்துக்கும் தீங்காகும். உங்கள் அலுவல்களை முடித்த பிறகு வீட்டிற்குச் சென்று உடனே தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்து, அடிபிடி, வெடிகடி, குண்டு, சூடுகள் நிறைந்த யுத்தக் காட்சிகளைப் பார்ப்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள். காதல்க் கதை சோகக்காட்சிகள், கணவன் மனைவி வாக்குவாத காட்சிகள்,அண்ணன் தம்பி அடிபிடிக்காட்சிகள், கொலை, கொள்ளைக் காட்சிகள், பிறனை எவ்வாறு தட்டிவிடலாம் என்ற தீய எண்ணங்களை உங்கள் மனதுக்குள் புகுத்தும் காட்சிகள், ஏமாற்றப்பட்ட, பழிவாங்குதல், கெடுக்கப்படும், உரிக்கப்படும், நெருப்பில் விழும், தற்கொலைக் காட்சிகளைப் பார்த்து, உங்கள் மனதைக் குழப்பமடையவிடாதீர். உங்கள் மனதைக் கட்டுப் படுத்தி அதிகம் அமைதி, இனிமையான பாடல்கள், சங்கீதங்களில், நற்செயல்களைச் சித்தரிக்கும் காட்சிகளில் கவனம் செலுத்துங்கள்.*

*"நல்லாரின் சொற்கள் தூய வெள்ளிக்குச்சமம் பொல்லாரின் எண்ணங்களோ பதருக்குச்சமம்" நீ.மொழி 10:20*

**அருட்.சகோ.ஞா.மரியநாதன்**

## ஆயர்களும் பணித்தளங்களும்

| மறை மாவட்டம் | ஆரம்பிக்கப் பட்ட ஆண்டு | ஆயர் பெயர் |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 1849 | அதிவந்தன தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை |
| 2. பதுளை | 1873 | " வின்சன் பெர்னான்டோ ஆண்டகை |
| 3. கொழும்பு | 1886 | " ஒஸ்வெல்ட் கோமிஸ் மேரியஸ் பீரிஸ் ஆண்டகை |
| 4. அனுராதபுரம் | 1892 | " றோபட் அந்திராடி ஆண்டகை |
| 5. கண்டி | 1893 | " வியானி பெர்ணான்டோ ஆண்டகை |
| 6. காலி | 1893 | " ஹெரல் அன்ரனி ஆண்டகை |
| 7. திருகோணமலை மட்டக்களப்பு | 1893 | " கின்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை |
| 8. சிலாபம் | 1939 | " பிராங்மாக்கஸ் பெர்னான்டோ ஆண்டகை |
| 9. மன்னார் | 1981 | " இராயப்பு யோசப் ஆண்டகை |
| 10. குருநாகல் | 1987 | " றேமன் பீரிஸ் ஆண்டகை |
| 11. இரத்தினபுரி | 1996 | " திலக் ஜெயசுந்தரா ஆண்டகை |

[illegible], Sr. JM

## இளைஞனே! உனக்கு ஓர் அழைப்பு

உன் வாழ்வின் அர்த்தத்தைத் தேட,
அல்லலுறும் மக்களின் துயர்களைய,
அன்புப் பணியில் நீயும்ஒரு அருட்சகோதரராக பணியாற்ற உனக்கு ஓர் அழைப்பு

O/L அல்லது A/L கற்றுத் தேறிய உனது கல்விக்கு ஏற்ற மேற்படிப்புகளுடன், ஆன்மீக வழிகாட்டல் பயிற்சிகளும் பெற்று இன்றைய காலத்தில் இன்னலுறும் மக்கள் துயர் தீர அசீசியின் பாதையில் அருட்சகோதரராக இணைந்துகொள்ள உடன் விண்ணப்பிக்கவும்.

மாகாணத் தலைவர்,
116, விகாரை வீதி, மாத்தளை

**நீதியை விதைத்து அமைதியை அறுவடையாக்குவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் மீட்புத்திட்டத்தில் மரியாளின் பங்கு.

இறைவன் தனது சாயலாகவும் பாவனையாகவும் படைப்பின் சிகரமாக மனிதனைப் படைத்து அனைத்தையும் விருத்தி செய்யும் பொறுப்பைக் கொடுத்தார். ஆனால் ஆதிப் பெற்றோர் ஆண்டவர்போல் ஆகும் அவாவினால் ஆண்டவர் அன்பிலிருந்து விலகி அருள் வாழ்வை இழந்து தீர்ப்புக்கு ஆளாகினர். அத்தீர்ப்பிலிருந்து மீட்க இறைவனின் ஓர் அவசரத் திட்டம்அளித்தார். யாதுமறியா பாவமற்ற மங்கையாக மாதாவை மனதினால் தேர்ந்து கொண்டார். பாவம் சூழ்ந்த உலகிலே பாவப் பட்ட மக்களின்மேல் கொண்ட அன்பினால் தம் நிலை தாழ்த்தி தம்மகனை மீட்பராக இவ்வுலகிற்கு அனுப்புவதாகக் கூறி கன்னியான கணவனை அறியாத அன்னை மரியாளிடம் தமது தூதனை அனுப்புகிறார்.

கபிரியேல் தூதனின் மங்கள வார்த்தையைக் கேட்டுத் தயங்கி நின்றாலும் சமூகத்தின் இழிச் சொலிற்கு ஆளாக வேண்டியிருந்தாலும் இறைவனின் திட்டப்படி ஆகட்டும் என்று தன்னைத் தாழ்த்தி இறைவனின் மீட்புத் திட்டத்தில் பங்கு கொண்டார்.

கிறிஸ்து பிறந்த வேளையிலே ஏரோதினால் ஆபத்து ஏற்படப் போகிறது என்ற வானதூதரின் வார்த்தையைக் கேட்டு அதன்படி குழந்தையின் உயிரைக் காப்பாற்றினார். குழந்தையைக் காணிக்கை கொடுப்பதற்காகக் கோவிலுக்குக் கொண்டு சென்ற வேளையிலே சீமோன் சொன்ன வார்த்தையை, ''இக்குழந்தை பலருக்கு வீழ்ச்சியாகவோ எழுச்சியாகவோ இருப்பான். உம் இதயத்தையும் ஒரு வாள் ஊடுருவும்'' எனக் கூறியதைத் தனது உள்ளத்திலே இருத்தித் தியானித்து வந்தாள்.

பன்னிரு வயதிலே இயேசு கோவிலிலே காணாமற்போன வேளையிலே தேடிக்கண்ட நேரம் "மகனே நானும் உன் தந்தையும் உன்னைத் தேடித்திரிந்தோமே'' என்று கூற "நான் எனது தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா'' என இயேசு கூறியதையும் தனக்குள் தியானித்து வந்தாள். கானாவூர் திருமணத்திலே இரசம் தீர்ந்தபோது அன்னை கிறிஸ்துவிடம் இரசம் தீர்ந்துவிட்டது என்று மற்றவர்களுடைய தேவையிலே கிறிஸ்து விடம் பரிந்து பேசுகிறாள். இயேசு "என் நேரம் இன்னும் வரவில்லை'' என்று கூறியும் அன்னை இயேசுவினுடைய இறை வல்லமையை உணர்ந்தவராக பணியாளர்களிடம் இயேசு சொல்வதைச் செய்யுமாறு சொல்ல இயேசுவும் அங்கே முதற் புதுமையாக நீரை இரசமாக மாற்றினார் . அங்கு தாய் சேயின் வல்லமையை வெளிப்படச் செய்கிறாள். இறுதியிலே இயேசுவின் சிலுவைப் பயணத்திலும் இவ்வுலகத் தாய்மாரைப் போன்று தடுத்து நிறுத்தாமல் அவரது அந்தத் துன்பத்திலே அவருடன் கல்வாரி மலை மட்டும் செல்கின்றாள். அவ்வேளையிலே சிமியோன் தீர்க்கதரிசி அன்று கூறிய வார்த்தையாகிய "உம் இதயத்தையும் ஒருவாள் ஊடுருவும்'' என்பதை நினைவு கூர்கின்றாள். அதன் பலனாக உடலோடும் உயிரோடும் இறைவன் தன்னிடம் அழைத்துக் கொண்டார். இறைவனின் திட்டமாகிய பாவத்தின் பிடியிலிருந்து மீட்பதற்காகத் தன்னை முழுமையாகத் தாழ்த்தி ஆம் என்று கூறியதற்கு இறுதி மட்டும் நிலைத்து நின்றாள் தேவதாய்.

சகோதரி மனுவெலா
திருச்சிலுவைக் கன்னியர் மடம்
மாத்தளை.

மக்கோனா டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தில் சமூக நல்நடத்தை நிலையத்திற்கான முதற்கல் நாட்டும்போது – அருட்சகோ.ஜெரோமி கிறிஸ்ரி ஆசீர்வதிப்பதையும், அருட்சகோ.போஸ் பரோ முதற்கல் நாட்டுவதை யும், சிறுவர்கள் கூடிமகிழ்வதையும் படத்திற் காணலாம்.

# சமாதானம்

தற்போதைய காலகட்டத்திலே நாமனைவரும் சமாதானமாக வாழ வேண்டிய கடமைப் பாட்டில் உள்ளோம். இந் நூற்றாண்டில் பெருகிவரும் தொழில் நுட்பங்கள் எண்ணிலடங்காதவை இத்தொழில்நுட்பம் மூலம் பலரக ஆயுதங்கள், அணு குண்டுகள் தயாரிக்கின்றார்கள். இதனால் ஏற்படும் விளைவுகளோ பாரியதாகும். நாம் அனைவரும் சாந்தியுடன் வாழவேண்டுமாயின் தற்போது நடைபெறும் போர்முறைகளை நிறுத்த வேண்டும். இலங்கையிலே எங்கு பார்த்தாலும் போர்முரசாகவே காணப்படுகிறது. இந்த யுத்தம் காரணமாக எண்ணிலடங்கா அழிவுகள் ஏற்படுகிறது.

ஓரிடத்தில் போர்நடைபெறும்போது ஆயிரக்கணக்கான மக்கள் அழிக்கப்படுகின்றனர் உறைவிடங்களை இழந்துள்ளனர். தாய்தந்தையைக் கூட இழந்து தவிக்கின்றனர். இவ்வளவிற்கும் காரணம் போர் முறையே ஆகும். வாழ்விடங்களில் குண்டுகள் வீசப்படுகின்றன. அவ்விடங்கள் தரைமட்டமாகி உள்ளன. ஆகவே அந்த மக்கள் இடம்பெயரக் கூடிய நிலை உருவாகியுள்ளது. இக் கொடிய யுத்தம் காரணமாக அவர்கள் இருப்பிடம் அழிக்கப் படுகிறது.

நாட்டில் இனவாத அரக்கனின் கோர்ப்பிடியிலும் யுத்தத்திலும் நாடு நிலைகுலைந்து பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது. இக்கொடிய யுத்தத்தினால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு அமைதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். எமது மக்களின் வாழ்வு நிலை தொழில் வாய்ப்பு, கலாச்சார உரிமைகளுடன் ஒற்றுமையாகி தலைநிமிர்ந்து வாழ வேண்டுமாயின் நாட்டிற்கு சாந்தியுடன் கூடிய நிரந்தர இறை சமாதானம் தேவை.

தேவராசா சோபிகா
மன்/நானாட்டான் ம/வி.

# புனிதர் கிறிஸோதம் அருளப்பர்

துறவிக்கு வேந்தனும் துரும்பு என்று ஒரு பழமொழி உண்டு. புனிதர் கிறிஸோஸ்தம் அதை முற்றிலும் நிறுவுகிறார். துறவியான இவரை வலிய ஆயராக்கி னார்கள். ஏழைகளுக்குச் செய்யும் நன்மை இறைவனுக்குச் செய்தும் தொழுகை என்ற கோட்பாடு உடையவர் அதை வாழ்ந்து காட்டினார். வாய் மொழியாகப் போதிக்கவும் செய்தார்.

ஏழை எளியவர்மேல் அக்கறை கொண்ட இவர் அநீதியை வன்மையாக எதிர்த்தார். அரசியும் மற்றோர் ஆயரும் இதனால் சினமுற்றனர். நாடு கடத்து வோம் என்று அச்சுறுத்தினர். கடவுள் இல்லாத இடம் ஒன்றிற்கு நாடு கடத்தினால் அஞ்சு வேனே தவிர, வேறெதற்கும் அஞ்சேன் என்றார். நம் புனிதர். இவர் சிறந்த பேச்சாளர். அதனால் இவருக்கும் அமைந்த சிறப்புப் பெயர் பொன்வாய் அருளப்பர் என்பதாகும். கிறிஸோஸ்தம் என்றால் பொன்வாய் என்று பொருள்.

அல்பிரட் அருண்ராஜ்
அந்தோனியார் ஆலயம், செட்டிகுளம்

# சரணடைந்தேன் இறைவா

பூங்காற்றாய் இளங்காற்றாய்
உன்னுள்ளம் தேடி
இருட்டான வாழ்வை வெளிச்சமாக்க
இரவில் கண்விழித்து - உன்னில்லம்
சரணடைந்தேன் இறைவா!

வெறும் மலையால் பல படியால்
உன்னில்லம் ஏறி
வேதனை மிகு வாழ்வை மகிழ்வாய் மாற்ற
பல நாள் காத்திருந்து - உன்னை
சரணடைந்தேன் இறைவா!

வெறும் கடலாய் பல நட்சத்திரங்களாய்
தெரிந்த உம்மை.
காற்றில் பறந்து மலையில் ஏறி
பல படிகள் ஏறி - உன்னை
சரணடைந்தேன் இறைவா!
முள்ளாய் வெறும் கல்லாய்
வாழ்ந்த என்னை ஓடும் நதியாய்,
நிற்கும் மரமாய் மாற்றிய உம்மை
போற்றி புகழ்ந்து - உன்னுள்ளம்
சரணடைந்தேன் இறைவா!

என்.ஷிறோனி ஜெனிபா
பன்விலை

# தாயன்பு

ஈரைந்து மாதம் கருவறையில்
என்னைச் சுமந்தாய்
ஈன்றெடுத்த பின்னர்
கண்விழித்து எனைக்காத்தாய்
உதிரத்தைப் பாலாக்கு - என்
உடலுக்கு ஊட்டம் தந்தாய்
நிலாச்சோறு நீயூட்ட உன்
நிலாமுகம் பார்த்து
நான் உணவு உண்டேன்

என் பிஞ்சு விரல் நீ பிடிக்க - உன்
தயவில் நான் நடை பயின்றேன்
பள்ளிப்பருவம் வந்ததும்
படாத கஷ்டமெல்லாம் பட்டு - எனைப்
படிக்கவைத்தாய்.
இன்னுமோர் ஜென்மம் எடுத்தால்
உன்கருவில் மீண்டும் உருவாகி
உன்மடியில் தவழ்ந்திட
வரமொன்று தருவாயோ
என் தாயே!

சேவியர் டானி டிசோன்
சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# சமாதானப் புறா

இதயக் கோயில் இனிதாய் திறக்க
அன்பு மலர் ஒன்றாய் தூவ...
வானத்திலே பறவைகள் கூட்டம்
ஒன்றாய் பறந்து சென்றது...
சாதனைகள் படைத்து
சவால்களை வென்ற சாதனையாளர்களை
இனிதாய் நோக்கி
இன்னிசைபாடிப் பறந்தது... சமாதானம்!
சமாதானத்தை நீ! என்றும் உயரத்தியே நின்றிட....
சமாதானத்தை நாம் வாழ்த்துவோம்...
என்றுமே நீ பறந்திடுவாய்.

பொ.யொசிந்தா,
தரம் - 08
2 ஆம் யாம், செட்டிகுளம்.

# உலகின் அன்பு தாய்

கருவினுள்ளும் இருளினுள்ளும்
கல்லாய்க் கிடந்த எம்மை
உறவினுள்ளும் உலகினுள்ளும்
உதித்தெழச் செய்த
உலகம் போற்றக்கூடிய உயிருக்கு
இணையான தெய்வத் தாயே

அன்பாய் வளர்ந்த உன்னிடம்
பண்பாய் நடப்பதிலே
பாரினில் ஆயிரம் புகழ்
பெற முடியும் தாயே
அருள் மழை பொழியும்
அந்த ஆண்டவன் கூட
உம்மை மனம் மகிழ்ந்து
வாழ்த்துவான் தாயே.

யே.மெல்சிறேன்,
டொன் பொஸ்கோ சிறுவர் இல்லம்,
மக்கோனா.

# உயிர்ப்பூ

இன்றைய உலகமயமாக்கல்
தாராளமயமாக்கல்
தனியாள் மயமாக்கல்
தனிமைப்படிருக்கும் மக்கள் சமூகம்
தங்கள் வாழ்வில்
அருள் இல்லை பொருள் இல்லை
அன்பு இல்லை, பண்பு இல்லை
பாசமில்லை, பகிர்வு இல்லை
நேசமில்லை, நெகிழ்வு இல்லை
இரக்கமில்லை, ஈரநெஞ்சமில்லை

என்று இல்லாமையில் இறந்துவிட்ட சூழ்நிலையில்
இயேசுவின் உயிர்ப்பு மானுட
உயிர்ப்புக்கு முகவரி தந்தது
நம்பிக்கை உயிர்ப்பைக் கொடுக்கிறார்
உயிர்த்த ஆண்டவரை உற்றுநோக்குவோம்.
காலம் ஒரு நாள் மாறும்
நம் கவலைகள் யாவும் தீரும்
என்ற நம்பிக்கையில் நம்
வாழ்வுப் பயணத்தைத் தொடர்வோம்.
வாழ்வின் நாயகன் இயேசு
உங்களை ஆசீர்வதிப்பாராக!
காரணம்
இது உயிர்ப்பின் காலம்
நம்பிக்கையின் காலம்
புதுவாழ்வின் காலம்
புத்துணர்வின் காலம்

சகோ செல்வா
அசிசி இல்லம்,
குருக்கள் மடம்.

# மறைந்தும் மறையாத...

திருச்சபையின் வளர்ச்சிப் பாதையினை செழுமைப் படுத்த அர்ப்பணிப் புடன் செயல்பட்டவர்களின் வரிசையில் காலம் சென்ற ஜேக்கப் செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் பணிவாழ்வு நல்ல முன்னுதாரணமாகும். அவரது பணி வாழ்வில் மேலொரு வாழ்வு உண்டு என மேலெளும் துன்பத்தை மறக்கின்றோம்'' என்ற பாடல் வரிகளுக்கு நிகராக வாழ்வுப் பாதையில் திருச்சபையின் சாட்சியவாழ்வை வாழ்ந்து 14.05.2006 இல் இறைபதம் அடைந்துள்ளார்.

யாழ்.டேவிற் வீதியில் வாழ்ந்த அமரர் செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் வாழ்வில் தன் பணிகளைத் தேடிச்சென்று செயலாற்றினார். ஓய்வு நேரங்களில் ஆலயங்களைச் சுத்தப்படுத்துவதிலும், ஊனமுற்றவர்கள், ஏழைகளை அண்டி உறவாடுவதுடன், அவர்களின் அடிப்படைத் தேவைகளைத் தன் வசதிக்கு ஏற்ப மறைவாக செயற்படுவதுடன், வழிபாடுகள், ஆராதனைகளை ஒழுங்காகப் பங்கேற்பதில் வீட்டிலும், ஆலயத்திலும் முன்மாதிரியாக வாழ்ந்து தங்களிற்ன் பிள்ளைகளை அர்ப்பண வாழ்வுக்கு வழிகாட்டி வாழ வைத்த குடும்பமாகத் திகழ்ந்தார்கள்.

திருச்சபையின் ஆன்மீகப் பணிப் பயணத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதில் முன்மாமதிரியான குடும்பமாக வாழ்ந்ததை அமரர் செபஸ்தியாம்பிள்ளை அவர்களும், அமரத்துவம் அடைந்த அவரது மனைவி மரியபாக்கியம் (பாக்கியம் ரீச்சர்) அவர்களின் பணிகளும் புனித பிரான்சீஸ்கன் 3 ஆம் சபையின் ஆரம்பகால பணியாளராகவும், மறைக்கல்வி கற்பித்தலில் ஆலயத்திலும், சூழலிலும் ஆற்றிய பணியினைப் பாராட்டி ஆயர்கள், பங்குத் தந்தையர்களின் நன்மதிப்பைப் பெற்று 40 வருடங்கள் முன்னுதாரண குடும்பமாகத் திகழ்ந்ததை அவர்கள் வாழ்வு சாட்சியம் பகருகிறது.

இவரது குடும்பக் கனிகளான பிள்ளைகள், அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரி அசுந்தீனா அவர்களும், அன்பின் சகோதரிகள் சபை அருட்சகோதரி கொறற்ரி அவர்களும் அர்ப்பண வாழ்வுடன் பணிபுரிகிறார்கள். இவர்களுடன் குருநகர் சென்ஜேம்ஸ் பாடசாலை ஆசிரியராகவும், வீணை இசையில் பலரை உருவாக்கி சங்கீத பூசணமாக ஆலய வழிபாடுகளில் இசை வழங்கும் திருமதி சுகந்தன் நிர்மலாவின் பணிகளும், புனித பிரான்சிஸ்கன் சபையின் நட்புடன் சுவிசில் வாழும் திரு.பீற்றர், சகோதரி அஞ்சலா U.K.யிலும் வசித்து பெற்றோரின் ஆன்மீக பணிகளின் தொடர் பணிகளை ஆற்றுவது திருச்சபையின் சாட்சிய வாழ்வின் முன்மாதிரிகளே.

– செயோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் மறுத்ததற்காக வருந்தவில்லை அதனது விழைவுக்காகவே வருந்துகிறார்கள்

சமூக, சமய பணிகளில் முன்நின்று உழைத்து, சர்வமத மக்களின் நல்லுறவுடன் யாழ்.மனித முன்னேற்ற நிலைய இயக்குநராகப் பணியாற்றி, 05.08.2007 இல் குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா காணும் அருட்தந்தை கி.யோ.ஜெயக்குமார் அடிகளாரின் அர்ப்பண வெள்ளிவிழா சிறப்புற இறை பாதை வழி வாழ்த்துகிறது.

அவரது அர்ப்பண வாழ்வில் வார்த்தையுடன் வாழ்வும் அர்த்தமுள்ளது என்பதை வெளிப்படுத்தும் அவரது சிறப்பு கட்டுரை இதில் பிரசுரமாகிறது.

இருபது வருட போரின் விளைவுகள் கொடூரமாக இருந்தாலும், இந்தப் போரின் வடுக்களும், அவற்றின் அனுபவங்களும், எம் அனைவரிலும் வாழ்வைப்பற்றிய புதிய சிந்தனைகளுக்கு, புதிய வாழ்வின் பரிமாணங்களுக்கு வித்திட்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது. போரின் தாக்கங்களும், அவற்றின் அனுவங்களும் எங்களுக்கு மட்டுமல்ல, மனித வரலாற்றின் எல்லா உறுப்பினர்களையும் புதிய வாழ்வுக்கு சிந்திக்கத் தூண்டியது என்பதுதான் உண்மை.

**போரின் ஊற்றுக்கள் என்ன? போரைத் தொடராமல் இருக்க வழிகள் என்ன?**

போர் மீண்டும் ஆரம்பிக்காது இருக்க நாம் எவற்றில் எம் திசைகளை மாற்றவேண்டும்?

இவை போர்கள் நடந்த நாடுகளில் வாழ்ந்த மக்களின் அடிப்படைக் கோள்விகள். இப்படியான கேள்விகளில் இருந்து பல விடைகளை மனிதன் வரலாற்று அனுபவத்திலிருந்து பெற்றான் என்பது யதார்த்தம்.

அவன்/அவள் பெற்ற அனுபவங்களில் இரண்டு முக்கியமாக முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும்.

முதலாவது :

மனித உரிமைகள் - மனித உரிமைகள் மறுப்பக்கப்பட்டால் அமைதி குலைந்து போர்மேகம் சூழும் என்பது வரலாற்று உண்மை. ஆகையால்தான் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின், ஐக்கியநாடுகள் சபை மனித உரிமைகளை முன்னுரிமைப் படுத்தியதோடு மட்டமல்லாது அவை பற்றி விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

எம் தாய்த் திருச்சபையும், காலத்தின் தேவையுணர்ந்து 'அவனியில் அமைதி' என்னும் சமூக கொள்கைத் திரட்டில், மனித உரிமைகளை வலியுறுத்தியதோடு மட்டுமல்லாது, மனித உரிமைகளுக்கான இறையியல் பின்னணியையும் தெளிவாக சுட்டி நிற்கின்றது.

இரண்டாவது :

ஒப்புரவு அல்லது மீள் இணக்கப்பாடாகும்.

பாதிக்கப்பட்டவர்கள் அநீதி செய்தவர்களை மன்னித்து ஏற்கவில்லையென்றால் அமைதி என்றும் நிலைக்காது.

இன்றைய நற்செய்தியும் மேற்குறித்த இந்த இரண்டு ஆழமான ஆன்மீக விழுமியங்களை வலியுறுத்தி நிற்கின்றது. 'இறையாட்சி நெருங்கிவந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்பது' பல பரிமாணங்களைக் கொண்டது.

**உண்மையின் நற்செய்தி**
**(Good News of Truth)**

கலா.2:5, கொலோ.1:5 இயேசுவின் வருகை, கடவுள் யார் - எப்படிப்பட்டவர்? அவர் அன்பின் தந்தை/தாய் - என்ற ஆழமான உண்மையை வெளிப்படுத்துகின்றது. தண்டிக்கும், பழிவாங்கும் கடவுள் அல்ல, மாறாக அரவணைக்கும் தந்தை/தாய்.

**நம்பிக்கையின் நற்செய்தி**
**(Good Nesw of Hope)**

கொலோ. 1:23 பழைய உலகம் நம்பிக்கையற்று, வாழ்வின் அர்த்த மற்ற, ஒரு உதவியற்ற, அநாதை நிலையை வலியுறுத்தும் போது இயேசு கொண்டுவந்த செய்தி நம்பிக்கையின் செய்தி - கடவுள் நம்மோடு - எனவே நாம் அஞ்சவேண்டியதில்லை.

**அமைதியின் நற்செய்தி**
**(Good News of God;s Promise)**

எபே.3:6 நம் கடவுள் எம்மிடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பதைவிட, எமக்கு தம் மகனை வாக்குப்பண்ணி எம்மிடம் அனுப்பியுமுள்ளார். எனவே நம்மிடம் அதிகம் கேட்பதைவிட எமக்கு அதிகம் வாக்களித்து அதனைக் காப்பாற்றுவதே நம் இறைவன்.

இந்த நற்செய்தியின் கருப் பொருள் 'மன்னிப்பு - ஒப்புரவு' இறைவனின் மன்னிப்பும், அரவ ணைப்பும்தான் பிளவுபட்ட மனிதனை அமைதிக்கு அழைத்தது. எனவே அமைதியின் இன்றியமையாத மறுபக்கம் மீளிணக்கப்பாடு அல்லது ஒப்புரவேயாகும்.

ஒளிவர யன்னல்கள் திறக்கப்பட வேண்டியது எவ்வளவு அத்தியாவசியமோ அதுபோலத்தான் சமாதானம் என்னும் ஒளிவர ஒப்புரவு என்னும் கதவுகள் திறக்கப்படல் இன்றியமையாததாகும்.

எம்மைப் பொறுத்தவரைக்கும் நாம் கடந்த காலங்களில் மனித உரிமைகளை மறுத்ததற்காக வருந்தவில்லை. மாறாக மனித உரிமைகளை மறுத்ததன் விளைவுகளுக்காகவே வருந்துகின்றோம். அதன் விளைவுதான் போராகும்.

இன்று நாம் செய்ய வேண்டியது மனித உரிமைகளை மறுத்த பாவத்தை வெறுத்து, மனித உரிமைகளை மதிக்கும் நிலைக்கு மனம்மாற வேண்டும். இந்த மனமாற்றம் இக் காலத்தில் எமக்கு அவசியமாகும். மனமாற்றம் என்பது பாவத்தின் விளைவுகளிலிருந்து தப்பிக்க மனம்மாறுவது அல்ல மாறாக, பாவத்திலிருந்தே விலகுவதற்காக உறுதியான தீர்மானமாகும்.

# சிலாப புனிதபெர்ணடேத்தம்மாள் ஆலய ஆன்மீக வளர்ச்சிப்பாதை

சிலாபம் வாழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக கடமைகளை நிறைவேற்ற பல ஆலயங்கள் காணப்பட்ட போதிலும் தமிழ் மொழியில் தமது ஆன்மீக கடமைகளை நிறைவேற்ற 1933ம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஆலயமே புனித பெர்ணதேத்தம்மாள் தேவாலயமாகும். காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு எம் முன்னோர் எமக்களித்த அருஞ்செல்வமே இவ் ஆயைம் ஆகும்.

அன்று முதல் இன்று வரை தமிழ் மொழியில் நிகழும் வழிபாடுகள் மக்களின் ஆன்மீக வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது. அன்னை மரியாள் புனித பெர்ணதேத்தம்மாளுக்கு காட்சி கொடுத்ததை நினைவூட்டும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ள லூர்து கெபியானது இவ் ஆலயத்தில் உள்ள சிறப்பான அங்கமாகும்.

மதமாற்றச் சட்டம் பரவலாகப் பேசப்படும் இக் காலத்தில், பிறமதங்களைச் சேர்ந்த சகோதரர்கள் கிறிஸ்துவை பின்பற்றி வாழும்போது பெற்ற அனுபவத்திற்கு நன்றியாய் அன்று அளித்துள்ள சுரூபங்கள் அவர்களது விசுவாசத்தை இன்றும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தேவாலய திருவிழா, பாஸ்கு கால திருச்சடங்குகள் அனைத்தும் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் இன்று வரை வெகுவிமரிசையாக நிகழ்கின்றது.

2000ம் ஆண்டு ஜுபிலி ஆண்டாகப் பிரகடனப் படுத்திய பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பர் செபமாலைப் பக்தியை உலகெங்கும் பரப்பினார். இதன்படி எம் பங்கிலும் செபமாலை தினமும் ஓதப்பட்டு வந்தது. 2000ம் ஆண்டு நிறைவடைந்தாலும் இச் செபமாலை ஓதும் பக்தி முயற்சி தினமும் நிகழ்ந்து கொண்டேயிருக்கறது.

செபமாலையில் மகிமையையும் மரியன்னையின் பாதுகாவலையும், அன்பையும் பற்றி மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி செபமாலைப் பக்தியை மக்களிடம் முன்னெடுத்துச் செல்ல வழிகாட்டியாய் இருந்தவர் அருட் சகோதரர் S.தொபியாஸ் அவர்களாவர். இதன்பயனாய் இன்று நூற்றுக் கணக்கான மக்கள் தினமும் மாலையில் லூர்து கெபியில் ஒன்று கூடி செபமாலை ஓதுகின்றனர்.

2006ம் ஆண்டு எம் பங்கு மக்களின் ஆன்மீக வாழ்வில் ஓர் புதிய அத்தியாயம் ஆரம்பித்தது எனக் கூறலாம். தேவதாயின் மாதமான வைகாசி மாதம் முழுவதும் பக்தர்கள் அனைவரும் ஒன்று கூடி செபமாலை ஓதியதுடன் இறைவார்த்தையும் அருட்சகோதரர் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. வைகாசி மாதம் முடிவடையு நாள் மாலை செபமாலையுடன் திருநாள் திருப்பலி உதவிப் பங்குத் தந்தை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. எமது தேவாலய வரலாற்றில் இத்திருவிழா முதல்தடவையாக கொண்டாடப்பட்டது என்பதை பெருமையுடன் கூறி நிற்கின்றோம்.

இங்குள்ள சிறப்பம்சம் யாதெனில் கத்தோலிக்கர் மட்டுமல்லாது, இந்துக்கள், பௌத்தர்கள் ஆகிய அனைவரும் ஒரே குடும்பமாய் இருந்து ஒரே விசுவாசத்துடன் அன்னையை மகிமைப்படுத்துவதாகும்.

மேமாதம் 3ம் திகதி சதாசகாய மாதா நவநாளும் எமது ஆலயத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தேவதாயை மகிமைப்படுத்தும் இந் நவநாட்களிலும் மக்கள் அனைவரும் ஒரே குடும்பமாய் இருந்து செபிக்கின்றனர்.

ஆனி மாதம் 13ம் திகதி புனித அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு நவநாட்களும் சிறப்பாக நடைபெற்றது.

திரு.இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட இம் மாதத்தில் யேசுவின் திருஇருதய நவநாட்களும் சிறப்பாக நடைபெற்றது. ஆனிமாதம் திரு.இருதய ஆண்டவர் திருநாள் கொண்டாடப்பட்டது.

## பிறந்தநாள் வாழ்த்து

சிலாபம் பிரான்சிஸ்கன் நவசன்னியாச இல்லத்தில் பணியாற்றும் அருட்சகோதரர் மோசஸ் அவர்களின் பிறந்தநாள் விழா 19.06.2006 இல் சிலாபம் பிரான்சீஸ்கன் நவசன்னியாச இல்லத்தில் கொண்டாடப்பட்டது. மாகாண முதல்வரும், அருட்சகோதரர்களும், மாணவர்களும் கலந்து இறை வேண்டுதல் செலுத்தி வாழ்த்துக்களைப் பகர்ந்து மகிழ்வித்தார்கள். இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

மக்கோனா சிறுவர் இல்லத்தில் சாப்பாட்டு அறைக்கு அடிக்கல் நாட்டுகையில் அருட்சகோ.கோஸ்வலேரா உடன் இல்ல இயக்குநர் அருட்சகோதரர் அருள் உதவி அருட்சகோதரர் ரூபன், மாகாணத் தலைவர் ஜெரோமி கிரிஸ்டி மாணவர்களுடன்

சிறுவர் முன்பள்ளி அடிக்கல் நாட்டுவிழா செட்டிகுளம் ஆலய வளாகத்தில் பங்குத்தந்தை ஸ்டீபன், அருட்தந்தை ஜெயபாலன், அருட்சகோ.நியுட்டன், அருட்சகோ தரிகள், இந்தமத குருக்கள் ஐயா ஆகியோர் இணைந்து இறை ஆசீர் பெற செபிப்பதை படத்தில் காணலாம்.

மக்கோனா டொன்பொஸ்கோ சிறுவர் இல்ல சமயல் அறை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் வைக்கும்போது அருட்தந்தை லூசன் ஆசீர்வதிப்பதையும், சகோ.ரூபன், மாணவர்கள் திரு.பீட்டர், செல்வி நலக்க ஆகியோர் கலந்து கொள்வதைப் படங்களில் காணலாம்.

# புனித பிரான்சீஸ் அசீசியார் "வாழ்வும் வழிகாட்டலும்"

## சிறப்பு போட்டிகள்

இன்றைய எமது வாழ்வில் புனித பிரான்சிஸ் அசீசியின் "வாழ்வும் வழிகாட்டலும்" கருவாக, உருவாக, வழிகாட்டலாக அமையும் கருத்துக்களை உள்ளடக்கியதான சமாதான விழிப்பூட்டலைத் தரும் ஆக்கங்களை எழுதி அனுப்பி சிறந்த பரிசுகளைப் பெற விரைந்து எழுதுங்கள். கவிதை, கட்டுரை, மணிக்கதைப் போட்டியில் எவரும் பங்குபற்றலாம்.

கவிதை : 12 - 16 வரிகளுக்கு மேற்படாத (மரபு அல்லது புதுக்கவிதைகள்)

கட்டுரை, மணிக்கதை: 350 சொற்களுக்கு மேற்படாததாக எழுதி சிறந்த பரிசுகளைப் பெற்று உங்கள் பங்குத் தளத்திற்கும் பெருமை சேருங்கள்.

**இப்போட்டியில் எவரும் பங்குபற்றலாம்.**

பக்தி சபைகள், பங்குத் தளங்கள் உற்சாகப்படுத்தி சிறந்த படைப்பாளிகளை உருவாக்க முன்வாருங்கள். அறிமுகப்படுத்துங்கள்.

போட்டி இறுதிநாள் : 10.09.2006
சிறப்புப் போட்டி பாதை முகவரிக்கு அனுப்பவும்

**நண்பர்களுக்கும் உபகாரிகளுக்குமான "பாதை"**

| | |
|---|---|
| Editor,<br>PATHAI,<br>franciscan Brothers,<br>Assesi Nivasa,<br>Thudarikulam Road,<br>Cheddikulam,<br>sri Lanka. | Editor,<br>PATHAI,<br>franciscan Brothers,<br>Canal Road,<br>Wattakaliya, Chilaw,<br>Sri Lanka.<br>Tel : 032 - 2223635 |

E.mail : pathaicmsf@yahoo.com

உங்கள் அன்பளிப்புகள், உதவிகள் பாதை பத்திரிகை வளர்ச்சிக்கு பயன்படுத்த உதவவும்.

10.09.2006 இற்கு முன் உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org